468

ஸுபாநு ௵ ஆடி - ஆவணி ௴

ஸம்புடம் - 2
ஸஞ்சிகை - 8

ஸ்ரீ:

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

[ஸ்ரீ அஹோபில மடம் பத்ரிகை]

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
14 SEP 1943
MADRAS

ஸம்பாதகர்: வங்கீபுரம் ஸ்ரீ. வாஸுதேவாசார்யர்

: பிரசுரிக்குமிடம் :

ராமஸ்வாமி தெரு, தியாகராயநகர்,

சென்னை

August, 1943
Vol. 2, No. 8

ரூப

ஸ்ரீ:

விஷய ஸூசிகை

		பக்கம்
1.	ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயம்	284
2.	ஸ்ரீ பிள்ளைபாக்கம் அழகியசிங்கர் வைபவச் சுருக்கம்	291
3.	வீர ரமணி	296
4.	ஸ்ரீ அஹோபில மடத்துக் கதைகள்	299
5.	உபாகர்ம விஷயம்	302
6.	செய்திகள்	305
7.	ஸம்பாதகரின் குறிப்புக்கள்	309
8.	கடோபநிஷத்	97

ஸ்ரீ:

வ்யாஸம் எழுதுபவர்களுக்கு விஜ்ஞாபநம்

1. எழுதி யனுப்பப்படும் வ்யாஸங்கள்—மூன்று அல்லது நாலு பக்கங்களுக்கு அதிகப்படாமல் சுருக்கமாகவும் தெளிவாகவும் இருத்தல் வேண்டும். காகிதத்தின் ஒரே பக்கத்தில் எழுதி யனுப்புதல் நலமாகும்.

2. ப்ரசுரப்படுத்தப்படாமல் இருக்கும் வ்யாஸங்களெல்லாம், தபால் சார்ஜுக்கு வேண்டிய ஸ்டாம்பு அனுப்பப்படும் பக்ஷத்தில், அவை உடனே திருப்பி அனுப்பப்படும்.

3. அநேக வித்வான்கள் மஹத்தான க்ருபையுடன் வ்யாஸங்களை அனுப்பி, அவைகளை உடனே பத்ரிகையில் ப்ரசுரம் செய்யவேண்டுமென்று நியமிக்கிறார்கள். பத்ரிகையில் இடம் ஸங்குசிதமாக இருக்கிறபடியால், அவர்களுடைய நியமநத்தை அவர்கள் இஷ்டப்ரகாரம் நிறைவேற்ற ஸாத்யப்படாமல் இருக்கிறது. அவகாசம் ப்ராப்தமாகும்பொழுது அவைகள் யதார்ஹம் ப்ரசுரம் செய்யப்படும். அப்படிச் செய்வதால் ஸம்பவிக்கும் கால விளம்பத்தை அந்த வித்வான்கள் க்ருபையுடன் க்ஷமிக்க வேண்டுமென்று ப்ரார்த்திக்கிறோம்.

ஸம்பாதகர்.

468

ஸ்ரீ:

ஸ்ரீமதே ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

ஸம்புடம் 2	ஸுபாநு ஹூ ஆடி - ஆவணி மீ	ஸஞ்சிகை 8

"அஹோபிலே காருடசைலமத்யே
க்ருபாவசாத் கல்பித ஸந்நிதாநம் |
லக்ஷ்ம்யா ஸமாலிங்கித வாமபாகம்
லக்ஷ்மீந்ருஸிம்ஹம் சரணம் ப்ரபத்யே ||"

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

[ஸ்ரீ அஹோபிலமடம் பத்ரிகை]

ஸ்ரீ அழகியசிங்கரின் ஆசாஸந அநுசாஸநங்கள்

ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா ஸ்ரீமந்ந்ருஸிம்ஹகாருண்யோத்திதா |
ஸ்ரீந்ருஸிம்ஹகடாக்ஷேண ஜீயாதாசந்த்ரதாரகம் ||
ந்ருஸிம்ஹபக்தாநாம் கேஹே கேஹே ஸதா வஸேத் |
ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியாதேவ்யா ந்ருஸிம்ஹப்ரியயா ஸஹ ||

[ஸ்ரீ ந்ருஸிம்ஹனுடைய கருணையால் உண்டாகி இருக்கும் இந்த "ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா" என்னும் பத்ரிகை, அந்த ந்ருஸிம்ஹனுடைய கடாக்ஷத்தாலும் ஸங்கல்பத்தாலும் சந்த்ரன் நக்ஷத்ரங்களுள்ளவரையில் அவை போலவே சிறப்புடன் வாழக்கடவது.

நம் ந்ருஸிம்ஹ பக்தகோடிகளின் க்ருஹங்கள்தோறும் இந்த "ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா" என்னும் பத்ரிகை, ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியையாகிற மஹா லக்ஷ்மியுடன் நித்யமாய் வஸிக்கக்கடவது.]

அ0116.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயம்

[3-ம் அங்கம்]

[ஸ்ரீ உப. அன்பில் வி. கோபாலாசார்ய ஸ்வாமி,
அட்வோகேட், திரிசிராப்பள்ளி]

[ஸம்புடம் 2, ஸஞ்சிகை 6, பக்கம் 228-ன் தொடர்ச்சி]

த்வேஷன்:—(களிப்புடனும் த்வேஷத்துடனும்) புருஷார்த்த மென்பது ஸுகம் தானே. இவர்கள் அறியாத—இவர்கள் தாராத—ஸுக முண்டோ? இவர்கள் ஸுக ஸர்வஜ்ஞர்கள்; ஸர்வ புருஷார்த்தங்களையும் அறிந்தவர்கள். உந்மதமாகிய ராகி மதத்தை ப்ரதிஷ்டாபநம் செய்யும் ஆசார்யைகள். மந்மதனே ஜகத் குரு. இவர்கள் அவன் ப்ரிய சிஷ்யைகள்; அவன் குரு ஸ்தாநத்தை வஹிப்பவர்கள்; ஆசார்யைகள் ஸ்வயமே ஆசார்யகம் செய்யுமவர். காமீ காமிநிகளான இவர்கள் தரும் பேராநந்தத்தை அம்ருதத்வ மென்று ஓதுவர். ஸ்வர்க்கத்தில் அப்ஸரஸ்ஸுக்களோடு ஸுகப்படுவதை அம்ருதத்வ மென்பர். மோக்ஷத்தையும் அம்ருதத்வ மென்று தானே பேசுகிறார்கள். 'அங்கநாலிங்கநஜந்யம் ஸுகமேவ மோக்ஷ:' என்பது ப்ருஹஸ்பதி மத மென்பர். அஸுர குருவான சுக்ராசார்யர் மட்டுமல்ல; தேவ குருவும் நம் கக்ஷியே. இவர்கள் கக்ஷி கட்டும் மஹாநந்தமே தேவகுரு பணிக்கும் மோக்ஷாநந்தம். இந்த அழகிய ஸுப்ரத்யக்ஷ ஆநந்த மார்க்கத்தை விட்டு மற்றொன்றைப் புத்திமான்களும் பேசுகிறார்களே? இதென்ன விந்தை! அவர்கள் வாதத்திலுள்ள பரஸ்பர விரோதத்தை அவர்கள் உணரவில்லையே!

"सर्वाधारः कथं भूयात्सर्वदोषविवर्जितः ।
तथैव सर्वकामार्थी निरपेक्षः कथं प्रभुः ॥"

பரமாத்மா ஸர்வத்திலும் அந்தர்யாமியாகவும் ஆதாரமாகவும் உளன் என்பதல்லவோ வேதாந்தி மதம். 'ஸர்வாதாரஃ ஸ ஸ்ரஷ்டா' என்பது ஸாராவளீ. அவன் எல்லாவற்றிலும் ஒட்டியுள்ளான். அவனை எப்படி ஆதேயமான பொருள்களின் தோஷங்கள் ஒட்டாம லிருக்கும்? ஒரு தோஷமும் அவனைப் பற்றாமல் விடாது. 'அவனை நிரபேக்ஷன் பற்றிலன்' என்கிறார்களே அது எப்படி ஒட்டும்? 'ஆத்மநஸ்து காமாய ஸர்வம் ப்ரியம் பவதி' என்று மைத்ரேயீ ப்ராஹ்மணத்தில் அவர்கள் தீர்மானம். நமக்கு ஸுகம் கிடைக்கவேண்டு மென்று பரமாத்மா ஆசைப்பட்டு, அதனால்தான் நாம் ப்ரியப்படும் வஸ்துக்கள் நமக்கு ப்ரிய போக்ய மாகுமாம். அவர் ஆசைப்படாவிட்டால் நமக்கு ஒன்றும் ப்ரிய மாகாதாம்;

எல்லாம் விஷமாகுமாம். 'விஷமப்யம்ருதம் க்வசித்பவேதம்ருதம் வா விஷமீச்வரேச்சயா' என்று காளிதாஸரும் ஓர் இக்ஷ்வாகு மன்னர் முகமாக இதைப் பேசுகிறார். கட்டி அணைக்கப்பட்ட பத்நீ ஸுகம் தருகிறாளா? அமூர்த்தனுக்கு கண்ணுக்கே தெரியாததும், ஓர் புலனுக்கும் விஷய மல்லாததுமான ப்ரஹ்ம மென்ற ஓர் பொருள் ஸுகம் தருகிறதாக ப்ரத்யக்ஷாநுபவத்திற்கு விரோதமாகப் பேசும் சப்த மாத்ர மான வேதாந்த வாதங்களை யார் ஒப்புவார்? ப்ரத்யக்ஷாநுபவத்தால் பாதிக்கப்படுவதை ஶாஸ்த்ரம் உணர்த்தவல்லதோ? அவர்களையே கேட்போம்.

ராகன் :—தோழா! இது மட்டுமோ?

"मधुभरितहेमकुंभौ मधुरिमधुर्यौ पयोधरौ सुदृशाम् ।
पिशितमिति भावयन्तः पिशाचकल्पाः प्रलोभयन्ति जडान् ॥"

இவர்கள் கண்களே கெட்டுப்போய் விட்டன. கண்ணைப் பறிக்கும் அழகிய கண்களையுடைய பெண்களின் தேன் நிறைந்த பொற்குடங்களான இனிமையிற் சிறந்த தனங்களை, இந்தப் பிசாசங்கள் மாம்ஸ பிண்டமென்று தூஷித்து உபதேசித்து அசடுகளை ஏமாற்றுகிறார்களே! பெண்மணிகள் ரூபத்தில் பிசாசத்தின் கண் செல்லாது; அது மேல் ரூபத்தைக் கண்ணெடுத்துப் பாராது; உள்ளேயுள்ள மாம்ஸ ரக்தங்களையே விரும்பித் தின்னும். ரக்தத்தை உறிஞ்சி மாம்ஸத்தைத் தின்பது தான் பிசாசத்திற்குப் பெண் போக ரஸம். பிசாசத்தின் கண்ணைப் போலவே வேதாந்திகள் கண். 'தாருணீ கருணவது' என்பது அவர்கள் பேச்சு. ஸ்ரீ சங்கரரென்னும் ஓர் ஜகத்குரு,

"நாரீஸ்தநபர நாபீதேசம் த்ருஷ்ட்வா மா கா மோஹாவேசம்
ஏதந்மாம்ஸவஸாதிவிகாரம் மநஸி விசிந்தய வாரம் வாரம் ॥
பஜகோவிந்தம் பஜகோவிந்தம் பஜகோவிந்தம் மூடமதே ॥'

என்று மூடர்களைக் கூப்பிட்டு உபதேசிக்கிறார்.

"ப்ரத்யக்ஷாஸ்வபி பாஹ்யகாம்ஸ்த்யஜேஹா", "யதாவஸ்து விசாரயதாம் க்ஷுத்ரதீநாமவிவிக்த ஸம்ஸாரஸம்ஸ்காரயீ ஸ்வபாவதோஷ்டிநீ நீஹாரவேஷாநாம்"

"நிரயோ நாரீநிர்மாணாகர்த்தா:", "க்வ விசிதவஸநயோர்நாயக:" என்று பேசுகிறார் ஓர் அத்யாத்ம நாடக குரு. ப்ரபோத சந்த்ரோதயத்தில், 'ஸகலம் ஸாரஹஸ்யம் ச தஸாவாயவம் ப்ரசக்ஷதே' என்பர். இவ்வாசிரியர்கள் கல்பம் பிசாச கல்பம். பிசாச கல்பர் பிசாசம் போன்றவர். சிறுமாமனிசரென்று அவர்களுக்குப் பேர். உண்மையில் குட்டிப் பிசாசுகள்; குட்டி சாஸ்த்ரிகள்.

த்வேஷன் :—விவேகருக்கு ஊழியம் புரியும் பேதாளங்கள் இவர். செவிட்டுக்குக் குயிலின் குரலினிமை தெரியுமோ? இவர்கள்

போகட்டும்; விவேகனைக் கொல்லவேணும். கொடியால் அணையப்பட்டுள்ள வ்ருக்ஷத்தை வெட்டி எறிந்தால் தானே கொடிகளும் தொலேகின்றன.

"உவநிஷஉ஫ஷராஹர஻வவ஝ூந ய஫ஸாயீவிூவெகஃ"

"வெஜொஷரா வெஷாஹாஃ"

என்பர் மீமாம்ஸகர். ஊஷர பூமியை எத்தனை ஆழமாய் உழுதால் என்ன? மண் புழுதி கிளம்பிக் கண்களிலும் உடம்பிலும் படியும்; நிஷ் பலம். ஐஹிக போக வஸ்துக்களையும் ஸ்வர்க்க போக வஸ்துக்களையும் பார்த்துக் களிக்காமல்படி கண்களைக் கெடுக்கின்றன. 'நம்முடைய வலே யில் சிக்காமல் அதை உதறிவிட்டு விஷ்ணு பக்தியும் விரக்தியும் விவேகர் ஆஸ்தாநம் சொல்லுகிறார்கள்' என்று மோஹபடர்கள் கூக்குரல் கேட் கிறது. விவேகரும் ஸுமதி தேவியுடன் வருவதை, ராகன் த்வேஷன் இருவரும் காண்கிறார்கள். திடுக்கிட்டு அச்சத்துடன் இருவரும் பேசு கிறார்கள். 'ஜிதகாசியான இவர் முன்பு நாம் நிற்கலாகாது; நமக்கு இப்போது பாக்யம் மந்தம். ப்ரதிமத ஜயத்தால் இவர் ப்ரகாசிக்கிறார். காசியிலுள்ள பெரிய புறச் சமய வித்வான்களை ஜயித்தவர். 'ஜீவநு ஹத்ராணி வஶ்ரூதி' என்று மஹா பாரதத்தில் ஸாவித்ரி உபாக்யாநம். 'வனதி ஜீவஹோ நஹொ நரஂ வஷூஶதாஉவி' என்றாள் மங்கள தேவதையான ஸீதை. ஓடிப் போவோம். உயிரைக் காப்பாற்றி வைத் திருப்போம். நம் தம்பிகள் காம க்ரோதர்கள் சீக்ரம் க்ஷேமத்தை ஸம் பாதிப்பர். நாம் அவஸரப்பட்டு எதிர்த்தால் ராஜ கார்யம் கெடும். இந்த் ரன் தாவிகளின் கண் சுழிப்புகள் வீணாயின; உலக மெங்கும் டங்காரத் தோடு ஸர்வ காலமும் ஒலிக்கும் மந்மத சாபம் வீணாயிற்று; குயில்களின் இனிய கூப்பாடுகள் பாழாயின. ஶ்ருங்கார வேத மண்டபத்தில் நர்த் தநம் செய்யும் மோஹேந்த்ரருடைய வீர லக்ஷ்மியும் பாழே."

"निर्जित्य मोहमसुरेन्द्रमिवामरेन्द्रो बद्धस्य मंक्षु पुरुषस्य बिमोक्षणेन।
अश्रूण्यकृत्रिमगिरामभिषङ्गजातान्यानन्दजैर्विपरिवर्तयिता विवेकः॥"

'விஷ்ணு பக்தியும் விரக்தியும் விவேகரை அணுகிவிட்டபடியால், மோக்ஷ ப்ராப்த்யாசைக்கு இடம் கிடைத்துவிட்டது. உபநிஷத் தேவீ குழந்தைகள் பிழைத்து மோக்ஷம் பெறவேணுமே யென்று அழுத துக்கக் கண்பனியை ஆநந்த பாஷ்பமாக விவேகர் செய்யப் போகிறார்.' எதிரிகள் ஒன்றை நினைத்து முயற்சி செய்கையில், விவேகர் யத்நம் ஜயிக்கப்போகிறதென்று எதிரிகள் வாயாலேயே வெளிவருகிறது. இது ஓர் பதாகாஸ்தாநகை யென்பர்.

ப்ரபோத சந்த்ரோதய நாடகத்தில், விஷ்ணு பக்தியின் வ்ருத்தாந் தத்தைப் பதாகை யென்பர். 'வதாகா வ்யாவிநீ கயா' விவேகருக்கு ஸஹாயம் செய்யும் ஓர் பெண்ணின் வ்ருத்தாந்தம் நெடுகிலும் வரு கிறது. இந்நாடகத்திலும் விஷ்ணு பக்தி வ்ருத்தாந்தம் பதாகை யென்று

ஸ்வாமி திருவுள்ளம். சந்த்ரோதயத்தில் 3-ம் அங்கத்தின் முடிவில் 'ஸாத்விக ஶ்ரத்தை யென்னும் பெண் விஷ்ணு பக்தியோடு மஹாத்மாக்கள் ஹ்ருதயத்தில் வஸிக்கிருள்' என்று பௌத்த க்ஷபணகன் பாடிய பாட்டைக் கேட்டதும் காபாலிகன், 'ஐயோ! நம் மஹாராஜருக்குப் பெருங் கஷ்டம் வந்துவிட்டதே!' என்று சொல்லிவிட்டு ஒரு ஶ்லோகம் பாடுகிருன்.

"मूलं देवी सिद्धये विष्णुभक्तिः तां च श्रद्धानुवता सत्त्वकन्या ।
कामान्मुक्तस्तत्र धर्मोऽप्यभूच्चेत् सिद्धं मन्ये तद्विवेकस्य कृत्यम् ॥"

'மோக்ஷ ஸித்திக்கு விஷ்ணு பக்தி தேவிதான் மூலம்; ஸத்வ குணத்தின் பெண்ணுகிய ஶ்ரத்தா தேவி அவளைப் பிரியாமல் சேர்ந்திருக்கிருள்; காமமற்ற தர்மத்தின் அநுஷ்டாநமும் அங்கே கூடச் சேர்ந்துவிட்டால், விவேகரின் கார்யம் ஸித்தமாயிற்றென்றே நான் நினைக்கிறேன். ஆயினும் உயிரைக் கொடுத்தாவது நம் ஸ்வாமி கார்யத்தை ஸாதிக்கவேணும்' என்ற காபாலிகன் பேச்சோடு மூன்றும் அங்கம் முடிந்தது. அங்கே எதிரி வாயிலிருந்து விவேகர் கோரும் மோக்ஷ ப்ராப்த்யாசையும் விஷ்ணு பக்தியின் மஹிமையும் பேசப்பட்டன. அதுபோலவே இங்கும் ராக த்வேஷர்கள் பேசுகிருர்கள். காபாலிகன் பேசுமிடத்தில் கர்ப்ப ஸந்தியின் தொடக்கம் ஸூசிதமென்று சந்த்ரோதய வ்யாக்யாநம். விஷ்ணு பக்தி வ்ருத்தாந்தமென்கிற தொடர்ச்சியான பதாகா வ்ருத்தாந்தமும் மோக்ஷ ப்ராப்த்யாசையும் சேர்வது கர்ப்ப ஸந்தி. 'गर्भस्तु दृष्टनष्टस्य बीजस्यान्वेषणं मुहुः'. மோக்ஷ பீஜம் காணுவதும் விக்நத்தால் மாறுவதும் தேடுவதுமா யிருக்கும். மோக்ஷ ஃபலத்தின் கர்ப்பாவஸ்தை, இங்கும் விஷ்ணு பக்தி வ்ருத்தாந்தமாகிய பதாகையையும், மோக்ஷ ப்ராப்த்யாசையையும் குறித்து, கர்ப்ப ஸந்தியின் தொடக்கமென்று ஸ்வாமி திருவுள்ளம் இது 'सैव पताका' 'उद्याने च तमसाम्' என்றோர் ஶ்லோகத்தில் 'பதாகா' பதத்தையும் 'கர்ப்ப' பதத்தையும் சேர்த்துப் பாடுவதாலும் வ்யஞ்ஜிதமாகிறது.

விவேகரும் ஸுமதியும் ப்ரவேசிக்கிருர்கள். 'உன் தோழிகளான விஷ்ணு பக்தியையும் விரக்தியையும் கொள்ளைகொண்டு போனவர்கள் அவளை விட்டுவிட்டு ஓடிவிட்டார்கள். உன் தோழிகள் உன் வசம் வந்துவிட்டார்கள். ஏன் இன்னம் துக்க மூர்ச்சை? தெளிவுறுய்; பயப்படாதே' என்று விவேகர் ஆஶ்வாஸம் செய்ய, 'ஒளிந்து தாக்கும் ராக த்வேஷர்கள் ஸமயம் பார்த்துத் திரும்பவும் தாக்குவரே' என்று பயத்தைப் பேசுகிருள்.

விவேகர் :—

"मा ते भूदिह मनोदौर्बल्यम् ।
अनुचितपदवीभिश्चिन्तयित्वा प्रयाता
न्यलमलमतिमात्रैरद्य बाले विषादैः ।

उपनिषदमुदारामुद्धमन् क्वापि लक्ष्ये
शरणमुपगतान् नस्त्रायते शार्ङ्गधन्वा ॥''

இங்குக் கீதையை நினைப்பூட்டிப் பேசுவதால், மோக்ஷ ப்ராப்த்யாசைக்குக் குறைவில்லை யென்று வ்யஞ்ஜிக்கப்படுகிறது. 'நானும் பிறந்து நீயும் பிறக்க வேணுமோ' என்பது ஈடு. பகவானும் பிறந்து கீதையையும் பிறப்பித்துப் பின் பிறவித் துயரை அறுப்பதில் என்ன கவலை யென்கிறார். இந்த ஸ்லோகம் கீதா தாத்பர்ய சந்த்ரிகையின் மங்கள ஸ்லோகம். இங்கே மோக்ஷ ப்ராப்த்யாசையைக் கீதையோடு தொடங்குகின்ற ''ப்ரபந்ந பாரிஜாதாய தோத்ரவேத்ரைக பாணயே | ஜ்ஞாநமுத்ராய க்ருஷ்ணாய கீதாம்ருத து ஹே நம:'' என்று கீதோபதேசாரம்பத்தை அநுஸரித்து '[illegible]' என்று தொடங்குவது ரஸிக்கத்தக்கது. இங்கே '[illegible]' என்று அழைப்பதுபோல சந்த்ரிகாரம்ப ஸ்லோகத்தில் '[illegible]' என்று பாடமும் திருவுள்ளமாயிருக்கலாம். அர்ஜுந விஷாத யோகம் என்பர் முதல் அத்யாயத்தை. அதற்கேற்ப 'ஏன் விஷாதங்கள்' என்கிறார். 'அதைர்யத்தை அடையாதே' என்று தொடங்கி 'மாஶுச:' [சோசியாதே] என்று பகவான் த்ருடிதஜநதா சோகமான கீதையைப் பாடிய பிறகும் உனக்கு துயரம் கூடுமோ? அலம் அலம்-ஏமாற்றம் வேண்டாம் வேண்டாம். 'போதும் போதும்' என்று பொருள். முதலிலும் 'மா' [வேண்டாம்] என்றும், முடிவிலும், 'மா' [வேண்டாம்] என்றும் பகவான் பேசுவதை 'அலம்' 'அலம்' என்று காட்டும் ரஸம் கவனிக்கத்தக்கது. 'பேதமை வேண்டாம்', 'துயரம் வேண்டாம்' என்று கீதோபக்ரம உபஸம்ஹாரங்கள். யாருக்குப் பாடினார்? அர்ஜுநனுக் கல்லவோ பாடினார் என்பாயோ? '[illegible]' ஏதோ ஒருவனை வ்யாஜீகரித்துப் பாடினது. பாடினது நரலோகம் முழுவதற்கும். நரன் என்பது நரஜாதி மாத்ரத்திற்கு உபலக்ஷணம்.

கீதை பாட்டுத்தானே, உபநிஷத்தல்லவே என்று நினையாதே. கீதை ஓர் உதாரமான உபநிஷத்து. அர்த்திகளையெல்லாம் உதாரரென்று கொண்டாடும் உபநிஷத்து. அர்த்திகளைக் கல்பகம் போல உதாரமாகச் செய்யும் உபநிஷத்து. நெருங்கினவரைப் பிறருக்கு மோக்ஷம் அளிக்கும் உதாரராகச் செய்வது. ஸர்வ பலங்களையும் வர்ஷிக்கும் பரமோதாரன் அத்யௌதார்யத்தால் வெளிப்படுத்தின ரஹஸ்யோபநிஷத்து. வர்ணபேத மன்றியில் எல்லோர்க்கும் மோக்ஷம் தரும் ரஹஸ்யத்தை வழங்கின வள்ளலான உபநிஷத்து. 'உத்வமந்' இந்தப் பதத்தின் முக்யப் பொருளை நினையாமல் 'வெளிப்படுத்தி' என்று லக்ஷ்யப் பொருளாக உரைத்தால் 'அதிஸுந்தரம்' என்றார் ஆசார்ய தண்டி. பகவான் முகாரவிந்தத்திலிருந்து வெளிவந்தது இந்த உபநிஷத்து. 'அதிஸுந்தரம்' 'சார்ங்கதந்வா' 'புஷ்பதந்வா'. மந்மதாத்வைத

கர்ப்பமான உபநிஷத்தை உபதேசித்து எல்லா இன்பங்களையும் தருகிறன் என்றுர்கள் மஹாமோஹ படர்கள். சார்ங்கதன்வா உபதேசித்த உபநிஷத்து. ஸாக்ஷாந் மந்மத மந்மதன் உபதேசித்தது. 'ஸுஶாஜஸ்வ ஸுதஜ்ஜாவ'

ஸுமதி :—ஆர்ய புத்ரரே!

"सर्गेषु प्रतिसंचरेषु बहुशः स्वर्गे तथा दुर्गतौ
जाग्रत्स्वप्नसुषुप्तिमुग्धिमरणावस्थासु दुःस्थासु च ।
दुःख्यन् प्रस्तरवन्नवन् बहुपशुः सुख्यन्नसौ देहभृत्
दग्धादग्धसजीवितद्रुमदशादीनो दरीदृश्यते ॥"

ஸமெஷ-எத்தனை தரம் உலக ஸ்ருஷ்டிகள்? கணக்கில்லை. 'ப்ரதிஸஂவரெஷ' எத்தனை ப்ரளயங்கள் ப்ரளயத்தில் அசேதநம்போலே கிடக்கும் இழவு. ஸ்ருஷ்டியின் க்ரமத்திற்கு நேர் விபரீதம் ப்ரளய க்ரமம் என்பதை 'ப்ரதி ஸஞ்சரம்' என்னும் பதம் காட்டுகிறது. 'வஹுஶஃ ஸ்வமெ' பஹு ப்ரகாரமாக ஸ்வர்க்கத்திலும் துக்கிக்கிறன். கிஞ்சித் ஸுக லேசம் இருந்தாலென்ன? எத்தனை தரம் ஸ்வர்க்கம் சென்று சென்று திரும்புகிறன். தேவர்களுக்கு இவன் பசுப்போல. இவனிடம் வேலை வாங்கி இவனைக்கொண்டு அவர்களுக்குப் போகம். 'தஂ தெவா ஸக்ஷயந்தி' தின்று கொன்றுலும் வேறு ஜந்மம் வரும். அங்குள்ள வரையில் ஊழியம் விடாது. 'வாஜஸூாஸநிரீக்ஷணெ' என்று மேலே ஸாதிக்கிறுர். என்றைக்குத் தள்ளி விடுவரோ என்று பயம் நித்யமாயிருக்கும். கொஞ்ச ஸாரமும் பயத்தினுல் கெடும். 'தயா ஒுமெளள' ஸ்வர்க்க கதியில்லாமல் மூன்றுவது கதியில் ரௌரவாதி நரகாவஸ்தைகளை இன்னவென்று வர்ணிக்கத் திறமின்றி வாங்மநஸாகோசரமென்பதை 'தயா' என்பது காட்டுகிறது. விரக்தியை ஊட்டுவதான ஸாதநாத்யாய பாதங்கள் வரிசை க்ரமமாக இந்த அங்கத்தில் ஸூசிக்கப்படுகின்றன. ஸாதநமும் பலமுமாகச் சேர்ந்து எட்டு அங்கங்களில் நிரூபணம். பலத்தையும் சேர்த்து அஷ்டாங்க யோகத்தின் இலக்கம். முதல் பாதமான வைராக்ய பாதத்தின் முதல் பாதத்திலுள்ளதை இந்த ஶ்லோகத்தின் முதல் பாதத்தில் ஸூசிக்கிறுர். பஞ்சாக்நி வித்யையில் சொன்னபடி, ஸ்வர்க்கத்திலிருந்து விழுந்து மானிட தேஹம் வருமளவும் 'பருத்தி பட்ட பன்னிரண்டும் பட்டு பூட்டைக் குண்டிகைபோலே ஏறுவ திழிவதாகத் தூமாதி மார்க்கத்தில் பரிப்ரமிப்பதெல்லாம் ஸூசிதம். 'ஜாக்ரத்'-'ஜஹஜூ நாஂ ஜாமராஷிஸ்திஷு ஸவதி ஸமெஶவஂ ஒஶிதஂ தஜ' என்பது ஸாராவளியில் காட்டிய ரீதி. இங்கு ஜாக்ரத் தசையில் படும் துக்கம் ப்ரஸித்தமே. ஸ்வர்க்கத்தில் ஜாக்ரத் மட்டுமே; தூக்கமும் ஸ்வப்நமு மில்லை. 'ஸ்வப்ந' 'ஒுஃஸ்வ

நாஶிநே நம: ' என்பது ஸஹஸ்ர நாமம். 'ஸுஷுப்தி' கல்லுப்போல ஞான தர்ம ப்ரஸர மில்லாத தசை. முக்தி, பாஷாண கல்பமான தென்பர் ந்யாய மதஸ்தர். 'நாஹமத்ர போ4க்3யம் பஶ்யாமி விநாஶமேவாபீதோ ப4வதி' என்பன் இந்த்ரன். 'ஸம்பத்தௌ ஸுஷுப்தே ப்ரளயவத்ஸ்தம்பாவஸ்தாஸம்ஜீவஸாதிவஸிதே' என்பது ஸாராவளி. தூக்கமும் ப்ரளயம் போன்றது. கல்லுப்போலக் கிடப்பது. இதை அடுத்த பாதத்தில் 'ஸ்வப்நே ப்ரஸ்தரவத்' என்றும் விளக்குகிறார். 'ப்ரஸ்தர' என்பது கல்லுக்குப் பெயர். 'மூர்ச்சா' மூர்ச்சாவஸ்தை. இங்கே இரண்டாம் பாதத்தின் முதல் பேடிகையின் அதிகரணங்கள் ஸூசிக்கப்படுகின்றன. மூர்ச்சாயிக ரஸம் ஸூசிக்கப்படுகிறது. பாதி மரண மென்றார் ஸூத்ரகாரர். மரணவஸ்தை பலாத்யாயத்தில் பல அதிகரணங்களால் விளக்கப்பட்டது. மோக்ஷ கதிக்கும் மரணம் வேணும். தேஹத்தின் மரண மில்லாமல் ஆத்மாவுக்கு முக்தியில்லை; அதனால் அதுவும் மோக்ஷ பலாத்யாயத்தில் விசாரிக்கப்பட்டதென்று ஸாராவளி. 'ஸ்வப்நே ப்ரஸ்தரவத்' ஸ்வர்க்கத்திலும் தூக்கமே; தூக்கத்தில் கல்லுப் போலக் கிடக்கை. 'த்ருஷ்டதநுகரணம்' என்பது ஸாராவளி. 'ப்ரஸ்தர' என்பது தர்ப்ப முஷ்டியையும் சொல்லும். 'யஜமாந:' 'ப்ரஸ்தர' என்று வேதம். தர்ப்ப முஷ்டியைப்போல யாகத்திற்கு ஸாதநமாகிறான் யாக யஜமானன். யாகத்தில் ப்ரஸ்தரம் போன்ற யஜமாநனென்று பொருள். 'ப்ரஸ்தரவத்' என்பதை முன்னும் பின்னும் ஒட்டலாம். 'கல்லைப்போல் கிடக்கிறான்' என்று முன்னோடு ஒட்டும். பஹு பசுக்களைக்கொண்டு யாகம் செய்கிறவரான ப்ரஸ்தரம் (தர்ப்ப முஷ்டி) போல யாக ஸாதநமான யஜமாநன். எத்தனையோ பசுக்களை ஆலம்பநம் செய்கிறான். இது கேவல கர்மிகள் விஷயம். நிஷ்காம யஜ்வா விஷயமல்ல. கிடைப்பதென்ன? சில காலம் ஸ்வர்க்கம். அதுவும் ஊழியம். எருது பரதேசம் போவதுபோல. 'வித்3யா விஹீந: பஶுபி4ஸ் ஸமாந:' என்பர். மோக்ஷ வித்யையிருந்தால் இந்தத் துர்க்கதிகளில்லை. தேஹஸம்ஸ்ருதி-துளி ஸுகம் பெற்றுத் திரும்பவும் தள்ளப்பட்டுத் தேஹம் பெறப் பருத்தி பட்ட பாடு. ஆர்த்3ரகாஷ்ட2-பச்சை மரத்தின் பொந்தில் நெருப் பிருந்தால் ப்ரதி திநமும் கொஞ்ச நாழியாகப் பல திநங்களில் எரியும். ஒரே காலத்தில் முழுவதும் எரிந்துபோய் விடாது. உள்ளே அக்நி வெகுநாள் குமுறிக்கொண்டிருக்கும். உயிரோடு சிர காலம் எரியும். அதுபோல உயிருடனே தேஹத்தில் எரிச்சல். ப்ரம்ஹ ஸூத்ரங்களையும் சாந்தோக்ய ஶ்ருதிகளையும் பாடுவதால் தூர்மதி இங்கே ஸம்ஸ்க்ருதமாகவே பாடுகிறாள் என்று ரஸம்.

[தொடரும்]

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
14 SEP 1943
MADRAS

ஸ்ரீ:
ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ பிள்ளைபாக்கம் அழகியசிங்கர் வைபவச் சுருக்கம்

[ஸம்புடம் 2 : ஸஞ்சிகை 7 : பக்கம் 262-ன் தொடர்ச்சி]

திருத்தாயாரின் கைங்கர்யமும் புத்ர ஸ்வீகாரமும்.

இப்படி பகவத் விஷய காலக்ஷேபம் முடிந்ததும், திரும்பவும் பெருமாள் கோவிலில் எழுந்தருளி யிருக்கும்போது, நெடுந்தெரு நரஸிம்ஹ ஐயங்கார் முதலான ஆஸ்திக தநிகர்களான சில ஸ்வாமிகள், இந்த ஸ்வாமி திருவடிகளில் ஆஶ்ரயிக்கவேண்டு மென்கிற உத்தேசத்துடன் ஸந்யாஸாஶ்ரம பரிக்ரஹம் பண்ணிக்கொள்ளும்படி ப்ரார்த்திக்க, அதையும் முன்போல் திருத்தாயாரின் கைங்கர்யத்தை உத்தேசித்து நிராகரித்து விட்டார். அந்த ஸமயத்தில் திருத்தாயார் கைங்கர்யமும் நேர்ந்து, அதுவும் பூர்த்தி யடைந்தது. அந்த ஸமயத்தில் தேவிகள் திருமேனி பாங்கில்லாம லிருக்கவே, ஸ்ரீ ஸ்வாமிக்குத் திருத்தாயார் கைங்கர்யம் பண்ணிய கைகளாலே பத்நிக்கும் கைங்கர்யம் பண்ணத் திருவுள்ள மில்லாததால் தம் திருத் தம்பியாரைத் தம்மிடம் வரும்படி நியமிக்க, அவரும் உடனே ஸ்ரீ பெரும்பூதூர் வந்து சேர, ஸ்வாமியும் தம் திருவுள்ளத்தை அவரிடம் தெரிவிக்க, அவரும் 'தந்யோஸ்மி' என்று சொல்லித் தமது இரண்டாவது குமாரரான ராமாநுஜன் என்கிற அநுபநீதனை ஸ்வீகாரம் செய்துகொள்ளும்படி ப்ரார்த்திக்க, ஸ்வாமியும் மறுதிநமே தத்த ஹோமம் முதலியவற்றைச் செய்து யதாவத்தாக ஸ்வீகாரம் பண்ணிக்கொண்டு அவனைக் கொண்டே பத்நியின் சரம கைங்கர்யங்களை நடப்பித் தருளினர்.

ப்ரேஷ மந்த்ரம் பெற்ற விதம்.

மறு வருஷம் கார்த்திகை மாஸத்தில் ஸ்ரீ தேவப் பெருமாள் நியமநம்பெற்றுக்கொண்டு, தமக்குப் பகவத் விஷயாசார்யனை பூவிருந்தவல்லி ஸ்ரீ உப. ஸ்ரீநிவாஸ ராகவாசார்ய ஸ்வாமி ஆபத் ஸந்யாஸம் பண்ணிக்கொள்ளவேண்டு மென்று தமக்குத் திருவுள்ள மிருப்பதாயும், அதற்கு வேண்டிய ஸாமக்ரிகளுடன் ஸித்தமா யிருப்பதாயும், தாம் சொல்லி யனுப்பும் ஸமயத்தில் வரும்படியும் நியமித்திருந்தபடியால், அந்த நியமநமும் கிடைத்ததும் உடனே புறப்பட்டுப் பூவிருந்தவல்லியை யடைந்து, அந்த ஸ்வாமிக்கு ஆபத் ஸந்யாஸம் பண்ணி வைத்துத் தாமும் அந்த ஸ்வாமியினிடமிருந்து ப்ரேஷ மந்த்ரத்தை உபதேசம் செய்துகொண்டு, காஷாயமும் பெற்றுக்கொண்டு, அந்த ஸ்வாமியின் சரமகைங்கர்யங்களையும் பூர்த்தி செய்துவிட்டு, மார்கழிமீ ஸ்ரீ பெரும்பூதூருக்கு

எழுந்தருளினர். இவ்விஷயத்தைப் பட்டாபிஷேக ஸ்ரீமுகத்தில் *11-வது ஶ்லோகத்தில் காணலாம்.

ஸ்ரீ பாஷ்யகாரரின் விசேஷாநுக்ரஹம்.

அந்த ஸம்வத்ஸரம் மார்கழி மாஸத்தில் இராப்பத்து உத்ஸவம் சாற்றுமுறை யானதும், ஸ்வப்நத்தில் ஸ்ரீ பாஷ்யகாரர் ஸந்யாஸாஶ்ரமத்துடன் அஹோபில மடத்தில் எழுந்தருளி யிருந்ததாகவும், தாம் அந்த ஸ்வாமியை ஸேவிக்கப் போனபோது தம்மைப் பார்த்து † "[illegible]" (நல்ல ஸந்யாஸி யாவீர்) என்று அநுக்ரஹித்ததாகவும் கண்டு ஸந்தோஷத்துடன் எழுந்தருளி யிருந்தார். அநந்தரம் தை மாஸத்தில் தேவப் பெருமாள் ஸந்நிதிக்கு எழுந்தருளி, அவ்விடத்தில் ஸ்வீக்ருத குமாரனுக்கு உபநயநம் செய்து, அவ்விடத்திலேயே பங்குனி உத்தர உத்ஸவம்வரை எழுந்தருளி யிருந்து, தமக்கு அந்தரங்கர்களான சில ஸ்வாமிகளுடன் அடுத்த ஆடி மாஸத்தில் தாம் ஆஶ்ரம ஸ்வீகாரம் பண்ணிக்கொள்ளப்போவதாயும், அதற்கு வேண்டிய ஸாதநங்களைச் சேர்த்து வைத்துக்கொண்டும், ஸமீப காலத்தில் தமக்கு நாமகரணார்த்தமாக ஸ்ரீ டெங்கிணிக் கோட்டை ஸ்வாமியை எழுந்தருளப் பண்ணிக்கொண்டு திருவெவ்வுளூருக்கு வரும்படியும் நியமித்துவிட்டு, சித்ரோத்ஸவத்திற்காக ஸ்ரீபெரும்பூதூர் எழுந்தருளினர்.

பூர்வாஶ்ரம வைபவம் முற்றிற்று.

ஸந்யாஸாஶ்ரம வைபவம்

ஆஶ்ரம ஸ்வீகார ப்ரகாரம்

ஹேவிளம்பி வருஷம் சித்திரை மாஸத்தில் ஸ்ரீ ஆதிகேசவப் பெருமாள் உத்ஸவத்தையும் ஸ்ரீ பாஷ்யகாரோத்ஸவத்தையும் ஸேவித்துக்கொண்டு, ஆனி மாஸத்தில் ஸந்யாஸத்துக்காகத் திருவெவ்வுளூருக்கு ஸ்வாமி எழுந்தருளப் போவதாகக் கேள்விப்பட்டு, ஸ்வாமியிடத்தில் விசேஷ ப்ரதிபத்தியுள்ள சேஷ பட்டாசார்யர் என்கிற வைகாநஸார்ச்சக ஸ்வாமி ஒருவர், ஸ்ரீ பாஷ்யகார மங்களாசாஸநத்திற்கு ஸ்வாமி எழுந்தருளின

---

* 11. [illegible — verse in Grantha script]

† 12. [illegible — verse in Grantha script] ' [illegible] ' [illegible] ॥

காலத்தில், ஸ்ரீ பாஷ்யகாரருடைய காஷாயத்தைக் கொடுத்து ஸந்யாஸம் நடக்கட்டுமென்று ஸாதிக்கவே, ஸ்வாமியும் 'இதுவுமொரு பாக்ய விசேஷம்' என்று அந்தக் காஷாயத்தை வாங்கிக்கொண்டு திருவெவ்வுளூருக்கு எழுந்தருளினர். அங்கெழுந்தருளிப் பத்துநாள் சென்றதும், ஹேவிளம்பி ஞு ஆடிமீ பூர்ணிமை புதன்கிழமை உத்தராஷாட நக்ஷத்ரங் கூடிய திநத்தில் தமக்கு ஆசார்யனை ஸ்ரீ அத்திப்பட்டு மஹாதேசிகன் ப்ருந்தாவநத்திற்கு ஸமீபத்தில் உள்ள கண்ணன் ஸந்நிதியில் பூர்வ திநத்தில் ஜீவ ஸ்ராத்தாதிகளை நடத்தி, ராத்ரி அக்நி ஸமீபத்தில் மாத்ராஸாதநம் செய்து ஜாகர வ்ரதம் அநுஷ்டித்து, மறுநாள் உதயத்தில் நித்ய கர்மாநுஷ்டாநம் முடிந்ததும் மூன்று ஸ்தலங்களில் ப்ரேஷ மந்த்ரோச்சாரணம் பண்ணும்போது ஸ்ரீ ராகவனுக்குத் திருமஞ்ஜந தீர்த்தம் எழுந்தருளப் பண்ணிக்கொண்டு போகும் நிமித்தம் திருச்சிந்நம் பரிமாறவே, அதைக் கேட்டுக்கொண்டிருந்த ஸ்வாமிகள், ஸ்ரீ ராகவனும் ஸாக்ஷாத்தாகவே அநுமதி பண்ணியதாகவே எண்ணி ஸ்வாமியின் பாக்ய விசேஷத்தைக் கொண்டாடினர்கள். இந்த வ்ருத்தாந்தத்தையும் ஸ்ரீ ஸ்வாமியே பட்டாபிஷேக ஸ்ரீமுகத்தில் *" [illegible] " என்கிற ஸ்லோகத்தினல் அருளிச் செய்துள்ளார். அநந்தரம் ஸர்வதாநம் பண்ணி மாத்ரா க்ரஹணம் பண்ணிக்கொண்டு முன்னமே எழுந்தருளி யிருக்கிற ஸ்ரீ டெங்கிணிக் கோட்டை ஸ்வாமியின் முகமாக ஸ்ரீ வீரராகவ சடகோபன் என்கிற நாமகரணம் பண்ணப்பட்டவராய், அன்றே சாதுர்மாஸ்ய ஸங்கல்ப திநமாகையால் க்ஷௌரமும் ம்ருத் ஸங்க்ரஹணமும் செய்துகொண்டு, ஸ்ரீ ஸ்வாமிக்காக ஹ்ருத்தாப நாசினியின் (திருவெவ்வுளூர் புஷ்கரிணியின்) தென்மேற்கு மூலையில் கட்டப்பட்டிருந்த குடீரத்தில் எழுந்தருளியிருந்து, ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரம் முதலிய க்ரந்தங்களை ஆஸ்ரிதர்களுக்கு அநுக்ரஹித்துக்கொண்டு த்ரிஷவண ஸ்நாநம் பிக்ஷாடநம் முதலான பரமஹம்ஸ லக்ஷணத்துடன் எழுந்தருளியிருந்தார்.

ஸ்ருதிகீதா வ்யாக்யாநமும் அர்க்கள பஞ்சகமும் அருளிச்செய்தது

அப்போது அவ்வூர் ஜில்லா முன்சீப்பாக இருந்த ஒரு ஸ்மார்த்த அத்வைதி வித்வான் ஸ்ரீ ஸ்வாமியைத் தண்டன் ஸமர்ப்பிக்க வேண்டுமென்று வக்கீல்களின் மூலம் அநேகாவ்ருத்தி ப்ரார்த்திக்கச் செய்தேயும் ஸ்ரீ ஸ்வாமி திருவுள்ளம் இசையாதிருக்கக் கண்டு, ஒரு ஸமயம் ஸ்ரீ தட்டை ரங்காசார்யர் அவ்விடம் வந்தபோது அவர் முகமாகவும் நிர்ப்பந்திக்கவே, ஒருநாள் ஸாயங்காலத்திய நீராட்டத்திற்கு முன்பு

---

* [illegible] |
[illegible]
[illegible] |"

அவரை வரச்சொல்லி நியமநமாக, அவரும் உபஹார ஹஸ்தராய் வந்து தண்டன் ஸமர்ப்பித்து நிற்க, ஸ்ரீ ஸ்வாமி அவரை உட்காரும்படி நியமித்து விசாரிக்கும்போது, அவரும் ஸ்ரீ பாகவதத்தில் ஸ்ருதி கீதையில்—

“𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌨𑍍 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍍𑌯𑌨𑌿𑌰𑍍𑌦𑍇𑌶𑍍𑌯𑍇 𑌨𑌿𑌰𑍍𑌗𑍁𑌣𑍇 𑌗𑍁𑌣𑌵𑍃𑌤𑍍𑌤𑌯𑌃 ।
𑌕𑌥𑌂 𑌚𑌰𑌨𑍍𑌤𑌿 𑌶𑍍𑌰𑍁𑌤𑌯𑌃 𑌸𑌾𑌕𑍍𑌷𑌾𑌤𑍍𑌸𑌦𑌸𑌤𑌃 𑌪𑌰𑍇” ॥

என்கிற ப்ரஸ்ந ஸ்லோகத்திற்கும் அதற்கு ஸமாதாந ஸ்லோகமாகிய,

“𑌬𑍁𑌦𑍍𑌧𑍀𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌮𑌨𑌃 𑌪𑍍𑌰𑌾𑌣𑌾𑌨𑍍 𑌜𑌨𑌾𑌨𑌾𑌮𑌸𑍃𑌜𑌤𑍍𑌪𑍍𑌰𑌭𑍁𑌃 ।
𑌮𑌾𑌤𑍍𑌰𑌾𑌰𑍍𑌥𑌂 𑌚 𑌭𑌵𑌾𑌰𑍍𑌥𑌂 𑌚 𑌆𑌤𑍍𑌮𑌨𑍇 𑌕𑌲𑍍𑌪𑌨𑌾𑌯 𑌚 ॥”

என்பதற்கும் அர்த்தத்தை அருளிச்செய்யவேண்டு மென்று ப்ரார்த்திக்க, அப்போது ஸ்ரீ ஸ்வாமி ஸாதித்த அர்த்தங்கள் அவர் மநஸ்ஸில் பதியாததால், அதற்காக ‘ஸ்ருதி கீதா வ்யாக்யாநம்’ என்று க்ரந்தம் அருளிச்செய்து அவருக்கு அனுப்பவே, அவரும் அதைப் பார்த்து ஸந்தோஷ மடைந்தார். இந்த க்ரந்தமும் தெலுங்கு அக்ஷரங்களில் அச்சிடப்பட்டிருக்கிறது. இப்படி யிருக்கும் காலத்தில் ஸ்ரீ ஸ்வாமியின் பெருமையில் அஸூயாயுக்தர்களான சிலர், பெருமாள் மங்களாசாஸநத்துக்கு ஸ்வாமி ராகவன் ஸந்நிதிக்கு எழுந்தருளும் காலத்தில் பெருமாளுக்கு எதிரில் உழல் தடியைப் போட்டுவித்தார்கள். இப்படிச் செய்யும் தாமஸ ப்ரக்ருதி யிடத்திலும் கரைபுரண்ட கருணையுடன் ஸ்ரீ ஸ்வாமி அவர்களுக்கும் நல்ல புத்தி ப்ரதாநம் பண்ணும்படி பெருமாளைப் ப்ரார்த்தித்துக்கொண்டு ‘அர்க்கள பஞ்சகம்’ என்கிற ஐந்து ஸ்லோகங்களை ஸாதித்து, அதைக்கொண்டே மங்களாசாஸநம் பண்ணிக்கொண்டு எழுந்தருளியிருந்தார். இந்த ஸமயத்தில் தான் சிரகால அநுவர்த்தநம் பண்ணித் தமக்கு உபாயாநுஷ்டாநத்தைப் ப்ரார்த்தித்துக்கொண்டிருந்த நெடுந்தெரு நரஸிம்ஹய்யங்கார் வந்து தமக்கு ஸ்ரீ வீரராகவன் திருவடிகளில் உக்திநிஷ்டா ரூபமான பரஸமர்ப்பணம் ஆகவேண்டு மென்று ப்ரார்த்திக்க, ஸ்வாமியும் ‘நீர் இங்கே யிருந்து சில்லரை ரஹஸ்யங்களை ஸேவித்து ப்ரபத்தி வாக்யோச்சாரணார்த்த பாடவத்தை ஸம்பாதித்துக்கொள்ளும்; இல்லையேல் ஆசார்ய நிஷ்டையாகவே நடக்கும்’ என்று ஸாதிக்கவே, அவரும் கால விளம்பாஸஹிஷ்ணுவாய்த் திருவுள்ளப்படி ஆசார்ய நிஷ்டையாகவே ஆகட்டுமென்று ப்ரார்த்திக்க, ஆவணி மாஸத்தில் பவித்ரோத்ஸவத்தில் யாகசாலையில் ஸ்ரீ ராகவன் எழுந்தருளியிருந்த காலத்தில் அப்படியே அவருக்கு ஶரணாகதி நடந்தது. பின் அதே மாஸத்தில் ஸ்வாமியிடம் அஸூயையுள்ள தாமஸ ப்ரக்ருதியான ஒருவர், சில சோரர்களைக் கொண்டு இரவில் ஆஸ்ரமத்தில் புகச்செய்து ஸ்வாமியின் ஆராத்யமான ஸாளக்ராம மூர்த்திகளையும், மற்றும் பழம் கற்கண்டு முதலிய பொருள்களையும் அபஹரிக்கச் செய்ய, ஸ்வாமி அதையும் பொருட்படுத்தாமல் அந்த ஸமயத்தில் சில பரமைகாந்திகளால் ஸமர்ப்பிக்கப்பட்ட வேறு ஸாளக்ராமங்களைக் கொண்டு ஆராதநத்தை நடத்திக்கொண்டு யாதொரு மநோ விகாரமுமில்லாமல்

"வரம் ஹுதவஹஜ்வாலா பஞ்ஜராந்தவ்யவஸ்திதி: |
ந ஶௌரிசிந்தாவிமுகஜநஸம்வாஸவைஶஸம் ||"

என்றபடி 'உத்வாத' என்பதை அநுஷ்டிக்கத் திருவுள்ள மிருந்த போதிலும் உத்தார கால ப்ரதீக்ஷராய் எழுந்தருளியிருந்து, அக்காலம் வந்தவாறே பெருமாள் கோவிலை உத்தேசித்து எழுந்தருளினர். அப்போது மார்க்கத்தில் நீர்வளூர் முதலிய அக்ரஹாரங்களில் தங்கி, கார்த்திகை மாஸம் ஹஸ்த நக்ஷத்ரத்தில் பெருமாள் கோவில் எழுந்தருளி,

"யோவஸௌ ஜயாஹுதாஶேத்யுபாயிஜகதயா நாயி ஶாஸ்த்ரக யோகிபி:
யஸ்மாஸுத்ரத்ரயீ யம் வாதிரஸ நகா நேதி நேத்யாஹ வேத:
வேயோஷ்ஞாஹ்ரேய: க்ஷிதிரிஶிவரோ வீக்ஷ்ய ஹ்ருஷ்டா யத்ருக்ஷே
ஸஞ்ஜாதம் தேவராஜம் வரதமிஹ தத்ர ஹஸ்தே ஸமீக்ஷே ||"

என்று தேவப் பெருமாளை மங்களாசாஸநம் செய்து, ஸ்வாமிக்காகவே ஆனைகட்டித் தெருவுக்குப் பின் தெருவில் ஒரு மனையில் கட்டப்பட்ட ஆஸ்ரமத்தில் எழுந்தருளி யிருந்தார்.

சாரீரக ஸுப்ரபாதமும் வேதாந்த கௌஸ்துப ஸாரமும் அருளியது.

அந்தக் காலத்தில் சில ஸ்வாமிகள் ஸ்வாமி ஸந்நிதியில் ரஹஸ்ய த்ரய ஸாரம் முதலான க்ரந்தங்களை ஸேவித்து ஸ்வாமி திருவடிகளில் ஆஸ்ரயித்தார்கள். அடுத்த மார்கழி மாஸத்தில் ஸுப்ரபாதாநுஸந்தானார்த்தமாக ஶாரீரகாதிகரண விஷய வாக்யமாகிற பர்யங்கத்தில் சயனித்துக்கொண்டிருக்கிற தேவப் பெருமாளை எழுப்புவதாக இருக்கும்படி ஒரு ஸுப்ரபாத ஸ்தோத்ரத்தை 'ஶாரீரக ஸுப்ரபாதம்' என்று பெயரிட்டு அடியேனுடைய ப்ரார்த்தனையின்பேரில் அருளிச்செய்து, ப்ரதிதிநமும் திருப்பள்ளியெழுச்சி திருவாராதநத்தில் இந்த ஸுப்ரபாதத்தையும் ஸேவித்துக்கொண்டு, அந்தத்தில் சாற்றுமுறை காலத்தில் திருப்பாவை திருநாள் பாட்டு ஸேவித்தான பின்பு இதில் ஒரு ஶ்லோகமும் அநுஸந்தித்தருளினர். இப்படி அநுஸந்தானம் நடக்குங் காலத்தில் கோதா ஸ்துதியில் முப்பதாவது ஶ்லோகம் அருளிச் செய்யப்படாமலிருந்ததால், அதற்காக:

"ஹஸ்த்யத்ரிக்ஷேத்ரவர்ணாஶ்ரயாம்பி ஶௌதே
யுக்தா ஹி க்ருஷ்ணவிஹவாநுஹவாய ஶாயா: |
த்ரிம்ஶத்க்ரதாயத்யிதமோத்வஜநம் க்ஷயோக்தா:
ஶோவீஷ்வ க்ஷயி தத்ஸ தயா வ்யஹுஹ்ருக ||"

என்கிற ஶ்லோகத்தை அருளிச்செய்து இதை இருபத்தெட்டாவது ஶ்லோகமாக அநுஸந்தித்து, அதன் பின் "ஶதவேணிநீயா" "ஜதிவிகவிதஹக்ஷ:" என்கிற ஶ்லோகங்களை அநுஸந்தித்தருளினர். அநந்தரம் வேதாந்த கௌஸ்துபம் என்ற சைவ வைஷ்ணவ க்ரந்தத்தைக் கடாக்ஷிக்கும் போது 'வேதாந்த கௌஸ்துப ஸாரம்' என்று ஒரு க்ரந்தத்தை முந்நூறு ஸ்ரக்தரா வ்ருத்தங்களால் அருளிச்செய்தார். இந்த க்ரந்தத்தின் மஹிமையை இதைக் கடாக்ஷிக்கும் மஹா வித்வான்கள்தான் அறிய முடியும்.

[தொடரும்]

210116.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீ ந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

வீர ரமணி

[ஸ்ரீ. உப. S. T. ஸ்ரீநிவாஸாசார்யர், M.A., L.T., வித்வான்]

ஸ்ரீரங்க மெங்கும் பேராரவார மாயிற்று. இந்தியா முழுவதும் ப்ரசண்ட மாருதம் போற் படையெடுத்துப் பாழ்படுத்திவந்த அலாவுத்தின் கில்ஜீயின் ஸேநாபதியான மாலிக் என்பான் திருவரங்கத்தைப் பாழ்படுத்தித் தேவாதிதேவனின் திவ்யாலயத்தைப் பொடிசெய்ய ஸங்கல்பித்து வந்துவிட்டான். வீதிக ளெல்லாம் பாழாயின. வைணவ மக்கள் அல்லோல கல்லோலமாய் நாற்புறமும் துரத்தி யடிக்கப்பட்டனர். தெருவெல்லாம் மகம்மதியப் போர்வீரர்கள் நூற்றுக் கணக்காய்க் காவல் புரிந்திருந்தனர். திருவரங்கச் செல்வனுக்காகப் போர் புரிந்தவர்கள் படுகொடாகக் கொல்லப்பட்டனர். ஸாயங்காலம் மாலிக் ப்ரதாந கர்ப்ப க்ருஹத்தின் வெளிப்புற வாயிலில் தளங்களுடன் வந்து உட்கார்ந்து விட்டான். மகமதியப் போர்வீரர்களை நோக்கி, "கோயில் நம் கைவச மாயிற்று. இனி அவஸரம் வேண்டாம். பகல் முழுவதும் வேலை செய்து களைத்தோம். இனிக் காலையில் அந்த விக்ரஹத்தை உடைத்து, இந்த அறிவற்ற ஹிந்துக்களுக்குப் புத்தி புகட்டலாம்'' என்று கட்டளையிட்டு உட்கார்ந்தான்.

செஞ்சியிலிருந்து கோப்பன தேவராயன் பெருஞ் சேனையை அனுப்பி மகமதியரைத் தகர்க்கப்போவதாக வதந்தி. ஆனால் சேனை வரவில்லை. 'இதோ வந்துவிடும்; இப்பொழுது வந்துவிடும்' என்று எதிர்பார்த்தவண்ணம் ஏங்குகிறார்கள் ஸ்ரீவைஷ்ணவர்கள். ப்ரதி க்ஷணமும் ஹிந்து ஸேனையின் விஜய ப்ரவேசத்தைக் கண்ணோக்கியவண்ணம் கலங்கிநின்றார்கள். ஐயோ! பொழுது விடிந்தால் திருவரங்கத்தின் கதி என்னவோ! என்னவோ!!

நல்ல நிலா வெள்ளியை உருக்கிப் பெருக்கியதுபோல் வீசியது. கோயில் தாஸியான மதுமோஹினி தேம்பித் தேம்பி அழுதவண்ணம் நிற்கிறாள். "நாயனா! நா தண்ட்ரீ! இதேமய்யா அந்யாயங்கா உன்னதி? நேனேமி ஜேஸ்துனு? நாதல்லி!'' என்று ஸ்ரீரங்க விமாநத்தை நோக்கிக் கலங்குவாள். விடிந்தால் காவிரிக் கரைக் கிடந்த கற்பகத்தின் கதி என்னவோ என்று துடிப்பாள். அவளது அழகிய செந்தாமரை முகத்தில் நீர் பெருகி மல்கித் துளித்து ஓடியது. அழகிய அளகங்கள் கண்களை மறைத்தன. திடீரென்று ஏதோ யோசனை வந்ததுபோல் உள்ளே ஓடினாள். கிளி மிழற்றுவதுபோல் உரக்கப் பேசினாள். "ரண்டி! ரண்டி! மாமய்யா ரண்டி!'' என்ற சப்தம் கேட்டது. மோஹினி தெருவில் நடந்தாள்.

பாதத்தை முத்தமிட்டுத் துடைக்கும் நீண்ட ஜடை. ஜடையில் ஜ்வலிக்கும் நாகாபரணம். குழலில் வாஸனை வீசும் விதம் வித மலர்கள். நீண்ட கண்களில் உலகை வசீகரிக்கும் பார்வை. கறுத்த மைதீட்டு.

காதில் வஜ்ர தாடங்கம். மூக்கில் நக்ஷத்ரம்போன்ற புல்லக்கு. கழுத்தில் எல்லையற்ற ஆபரணங்கள். கொடிபோன்ற உடலை இறுக்கிச் சேர்த்துக் கட்டப்பெற்ற பீதாம்பரக் கச்சை. இடுப்பில் வைர மேகலை. காலில் கலீர்கலீர் என்ற சலங்கை. மூவுலகையும் வெல்வதற்கு விஜய யாத்ரை செல்பவளாகப் புறப்பட்டாள் மோஹினி. சற்றுப் பின்பு 'மாமய்யா' தலைப்பாகை கட்டி நர்த்தன உடையுடன் சென்றார். அவர் பின்னர் இனிய ம்ருதங்க வாத்யத்துடனும் துத்தியுடனும் இருவர் சென்றனர். கலீர் கலீர் என்று பிடியானை நடப்பதுபோல் நடந்தாள். அவள் முகத்தில் நிலவு வீழ்ந்து, அவளது அழகிய கறுத்த கண்களில் உள்ள கவலையை வெளிப்படுத்தியது.

ஆயிரக்கால் மண்டபத்தின் முன்னர் மஹமல் மெத்தையில் சாய்ந்து வீற்றிருந்தான் மாலிக். இரண்டு அரபிப் பெண்கள் மயில் இறகு விசிறியால் வீசிறிக்கொண்டிருந்தனர். வேறு இரண்டு மாதர்கள் ஓர் ஸுவர்ண பாத்ரத்தில் ஏதோ பானவிசேஷத்தை ஏந்தியவண்ணம் நின்றனர். உருவிய கத்தியுங் கையுமாய்ச் சற்று அப்பால் நூற்றுக் கணக்கான முகமதிய வீரர் நின்றுகொண்டிருந்தனர். ஓர் வீரன் ஓடிவந்து ஸலாம் செய்து "நடன மாது ஸர்க்காரிடம் ஆடிப் பரிசு பெறவேண்டுமாம்" என்று விஜ்ஞாபித்தான். மாலிக் சற்று ஸோபாவில் புரண்டு கொடுத்து—

"அச்சா! நாச்னீவாலீ க்யா! அரே! படா குஷீஹை ஆனேதோ"—[தாஸியா! ஸந்தோஷம் வரச்சொல்] என்றான். நிலவு குளிர்ந்து காய்கிறது. நீலமான பரந்த வானம். வானத்தை அளாவும் வெள்ளைக் கோபுரம் முன்பு தோன்றுகிறது.

கலீர்! கலீர்! கலீர்! மதுமோஹினி வந்தாள். கும்கும் என்ற ம்ருதங்க நாதம். ஜர்ஜர் என்ற இனிய பஞ்சம ஸ்ருதி. பார்த்தான் மதுமோஹினியை மாலிக். "அரே அரே வஹ்வா" என்று நிமிர்ந்து உட்கார்ந்தான். நாட்யம் ஆரம்பித்தது. குயில் கூவுவதுபோல் ஓர் குரல்; அம்ருதத்தை வாரி இறைப்பதுபோன்ற இனிமை. என்ன கண் அசைப்பு! என்ன துள்ளல்!

"सब रोगों का प्रेम ही है एक दवा इस दुनिया में ।
प्रेम दवा है आघ या हैं बोलो बोलो मनुजा ! ॥"

[ஸர்வ ரோகத்திற்கும் அன்பே மருந்து; அன்பு மருந்தா? நோயா? சொல். ஹே மநுஜா!] திருப்பித் திருப்பி அந்தக் கிளிமொழியாள் இதைப் பாடி அபிநயிக்க மாலிக் பரவசமானான். வானம் விமலமாய் இருந்தது. சந்த்ரன் ஏகசக்ராதிபதியாய்ச் செங்கோல் நடத்திப் பைய நடந்துகொண் டிருந்தான். நிலவு பட்டப்பகல்போல் வீசியது. மதுமோஹினி கடைசியில் "**आव मैने जाना क्या प्रेम है**" என்று பாடும்பொழுதே மாலிக் காம பரவசமானான். எழுந்தான் "நாச்னீ வாலீ! அப் மைபீ ஜானுக்யா ப்ரேம்ஹை இதர் ஆவ்-! ஆவ்!" [இப்பொழுது நானும் அன்பு என்னவென்று அறிந்தேன். இங்கு வா வா] என்று மயங்கிக் கலங்கி மதுமோஹினியைப் பிடித்தான்.

வெள்ளைக்கோபுரத்தின் மேல்தளத்தில், மதுமோஹினியும் மாலிக்கும் நின்று நகரத்தின் அழகைப் பார்க்கிறார்கள். மாலிக்கை மயக்கி மோஹினி அங்கு அழைத்துவந்துவிட்டாள். காமாவேசமாக அவன் முத்தமிடுங்கால் தனக்குத் தெரிந்த சிறிதளவு ஹிந்துஸ்தானி பாஷையில் "ஸர்க்கார்! மாப்கீஜியே இதர் பைட்கர் ஈ ஷஹர்கீ ஸெரத் தேகியே ஹாய் ஹாய் சாந்த்னீ கைஸீ பைலீஹை! கைஸீ பைலீஹை" என்று அவன் எண்ணங்களுக்கு இடங்கொடாமல் பேசினாள். மாலிக் ஜன்னலினருகில் நின்று கீழே நோக்கினான்; மேலே நோக்கினான்; பக்கம் நோக்கினான். கண்ணுக் கெட்டியமட்டும் பச்சைப் பசுந்தோப்புகள். பரந்த காவிரி நதி. வானளாவும் கோபுரங்கள்! நீலவானம்! நிறைந்த தண்மதி!

மதுமோஹினி ஒரு க்ஷணம் பித்துப் பிடித்தவள்போல் உடல் நடுங்கக் கைகுவித்துக் கண் மூடி த்யானித்தாள். பெருங் காற்றில் நீலோத்பலம்போல் அவள் உடல் நடுங்கிற்று. "ஸ்ரீரங்க தேவராயா! நாகு இங்க தைர்யம் ஈயண்டி!! நாதல்லி நாதண்ட்ரீ" என்று முணுமுணுத்தாள். மாலிக்கின் பின்புறம் சென்றாள். திடீரென்று மாலிக்கைக் கீழே தள்ளினாள். ஓ என்ற பேராரவாரம். மகமதிய வீரன் ஓ என்று அலறிய சத்தம் வீரர் காதில் விழுந்தது. நாற்புறமும் ஆரவாரம். மதுமோஹினியை வீரபடர்கள் சூழ்ந்துகொண்டனர். அவர்களது பாஷையில், "திருட்டுச் சிறுக்கி! நம் வீரனை என்ன செய்தாய்! துஷ்ட தாஸி!" என்று திட்டினர். அஸத்கான் என்ற வீரன் முன்வந்தான். ஒளி பொருந்திய வாளை வீசி 'உன்னை வெட்டப்போகிறேன்' என்றான். சலிக்காமல் நின்றாள் சஞ்சலாக்ஷி. அவள் முகத்தில் வெற்றி போராடியது. அவள் கண்களில் நீர் பெருகியது.

திடீரென்று "கொப்பன தேவராயர் திரண்ட ஸைந்யத்துடன் வந்துவிட்டார்; ஸ்ரீரங்கம் பிழைத்தது." என்று ஓர் பேராரவாரம் எழுந்தது. ஆயிரக்கால் மண்டபத்தின் முன்பே ஹிந்து ஸைந்யம் நுழையும் ஆரவாரம் கேட்டது. மதுமோஹினி கைகுவித்தாள். "ஸ்ரீரங்கராயா! நா குல ஜீவுடா! நா ப்ராணநாதுடா!" என்று புலம்பினாள். அவள் கழுத்தில் அஸத்கானது வாள் விழுந்தது. ரக்த வெள்ளத்தில் அந்த நாரீமணியின் தலை புரண்டது. அவள் முகத்தில் தெய்வீக ஒளி வீசியது. கொப்பன தேவராயர் வருவதற்குள் மாலிக்கைக் கொன்று அவன் ஸைந்யத்தையும் கலங்கச்செய்த பெரும் வெற்றி கூத்தாடியது. ஸ்ரீரங்கராஜனது தேவாலயத்தைக் காப்பாற்றிய பெருமிதம் அந்த அழகிய கண்களில் ஜ்வலித்தது.

கொப்பன ராயரது ஸைந்யம் உட்புகுந்தது. நாயகனற்ற மகமதிய ஸைந்யம் நிலைகுலைந்து நாற்புறமும் ஓடியது. தெருவெல்லாம் மகமதிய வீரரின் பிணங்கள்! ஹிந்து ஸைந்யங்கள் கேசவனது ஆலயத்தைச் சூழ்ந்து நின்றன. இப்படி வந்து மாபெரும் புயலைத் தடுத்த இந்த வீரப் பெண்மணியின் சரித்ரம் கோயிலொழுகு என்ற நூலிற் காணக் கிடைக்கிறது. அப்பெருமாட்டியின் ஸந்ததியாருக்கு ஏராளமான நில பலங்கள் நிவந்தமாகக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. நம் உடல் பொருள் ஆவியெல்லாம் நாராயணனதே என்று காட்டும் நல்ல பெண்மணியாகிய மதுமோஹினி ஸ்ரீவைஷ்ணவ உலகத்திற்கு எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் ஆளுந் தெய்வமாவாள் என்பதிலும் ஐயமுண்டோ?

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ அஹோபில மடத்துக் கதைகள்

ஸ்ரீ ஆதிவண் சடகோப யதீந்த்ர மஹா தேசிகன்

[ஸ்ரீ. உப திருப்பூந்துருத்தி V. கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார்]

"எங்களுக்கு அடிக்கடி ஆபத்துக்கள் வந்துகொண்டிருக்கட்டும்; அப்போதுதான் பகவானை ஸங்கீர்த்தநம் செய்ய முடிகிறது" என்றாள் குந்தி தேவி. ஐஶ்வர்ய மதத்தால் மத்தனாக இருக்கும்போது 'எல்லாம் நான்தான்' என்று எண்ணுகிறவன், தனக்குத் துன்பம் வந்துற்ற காலையிற்றான் 'எல்லாம் இறைவனது ஆணை' யென்று அறிகின்றான்.

ஆந்த்ர தேசாதிபதியாக நெடுநாள் அரசுபுரிந்த முகுந்த தேவ ராயன் என்னும் அரசன், கம்ப மதயானைக் கழுத்தகத்தின் மீதிருந்து இன்பமருஞ் செல்வத்தின் இனிமையைத் துய்த்தபோது ஸ்ரீலக்ஷ்மீ ந்ருஸிம்ஹனை மறந்தான்; தன்னைச் சூழ்ந்து முகஸ்துதி செய்த நயவஞ்சகர்களோடு இணங்கி உல்லாஸமாகப் பொழுது போக்கினான்; ராஜ தர்மங்களில் மனத்தைச் செலுத்தினானில்லை. பிறரிடமிருந்து மறைத்து வைக்கவேண்டிய தனது பலஹீனங்களை மறைத்து வைக்காமையினாலும், ஒற்றர்களே கண்களாய்த் தான் தன்னுடைய மாற்றரசர்களது கார்யங்களைக் கவனித்து அதற்கேற்றபடி தன்னுடைய பலங்களை வ்ருத்தி செய்துகொள்ளாமையினாலும், அவனுக்கு ஆபத்துக்கள் ஒன்றன் மேலொன்றாய் வந்தன. கடைசியில் பிறநாடுகளைக் கைப்பற்றுவதே தொழிலாய் மிகுந்த ஸைந்ய பலங்களைச் சேகரித்து வைத்திருந்த சில ம்லேச்சர்கள், அவனுடைய நாட்டைக் கைப்பற்றிக் கொண்டார்கள். நாட்டிலிருந்து துரத்தப்பட்ட அரசன் அந்த நாட்டுக்கு அருகிலுள்ள காடுகளில் மறைந்துகொண்டான். மிகவும் ஆப்தர்களான மந்த்ரிகளும் வேறு சிலரும் தவிர்ந்த மற்றவர்கள் அரசனைக் கைவிட்டார்கள்.

ஒரு நாயகமாய் உலகம் முழுவது மாண்ட இம்மன்னவன் கதி அந்தோ! இவ்வாறாயிற்றே! ஆயினும் இதுவும் அவனுடைய நன்மைக்கேயாயிற்று. உயர்ந்த ராஜபோகங்களெல்லாம் போய்க் காடுறையுங் காலத்தில் தான் இம்மன்னனுக்குத் தான் நெடுநாளாய் மறந்துவிட்ட எம்பெருமானைப் பற்றிய நினைவு வந்தது. 'ஐயோ! இதுகாறும் எம்பெருமானை முற்றிலும் மறந்திருந்த குற்றத்தாலன்றோ எனக்கு இந்தத் துன்பங்களெல்லாம் வந்தன' வென்று நினைத்துப் பஶ்சாத்தாப மடைந்து அன்று முதல் பகவத் ப்ரவணனாயிருந்தான்.

மநுஷ்ய பாவனையை நடித்துக் காட்டிய சக்ரவர்த்தித் திருமகன் கூட, தான் காடுறையுங் காலத்தில் தன்னுடைய கஷ்டங்களை யெல்லாம் நினைத்து, "ஐயோ! ராஜ்யம் போயிற்று. காட்டில் வாஸம் ஏற்பட்டது. பார்யையான ஸீதையை இழந்தேன். என்னுடைய ஆப்தனாகிய இந்த த்விஜனும் (ஜடாயுவும்) கொல்லப்பட்டான். இப்படி ஒன்றைக்காட்டி

னும் மற்றொன்று கொடியதாகிய இத்தகைய துக்கங்கள் நெருப்பைக் கூடப் பொசுக்கி விடுமே! அவற்றுக்கு நான் எம்மாத்ரம்!'' என்று புலம்பியதாக ஆதிகவி வர்ணிக்கிறார். ப்ரக்ருதி ஸம்பந்தத்தையுடைய ஒரு மன்னனுக்கு ராஜ்யத்தை இழந்தபின் மநஶ்ஶாந்தி உண்டாகுமா?

ஒருநாள் அரசன், "இது என்ன கஷ்டம்! ராஜ்யம் போயிற்று. பந்துக்கள் விட்டகன்றார்கள். காட்டில் வாஸம். ம்லேச்சர்கள் இங்கும் தொடர்கின்றார்கள். பட்ட காலிலேயே படும் என்பார்களே! என் மீது திருவுள்ளம் இரங்கலாகாதா?'' என்று வருந்திக்கொண் டிருந்தபோது, அருகிலிருந்த மந்த்ரி, " அரசே! தாங்கள் இவ்வாறு வருந்துவது ஸரி யல்ல. எவ்வளவு தான் துன்பம் வந்துற்றாலும் பெரியோர்கள் மனம் தளரமாட்டார். இன்று நாம் தோல்வி யடைந்தால் நாளையே வெற்றி பெறுவோம். நேற்று ஸ்வப்நத்தில் பகவான் அநுக்ரஹித்ததை மறக்க லாமோ?'' என்று அரசனைத் தேற்றினான்.

"மந்த்ரீ! நீர் எனக்குச் செய்துள்ள உபகாரங்கள் அநேகம். நான் ராஜ்யத்திலிருந்தால் உமக்கு எவ்வளவு வேண்டுமானாலும் ப்ரத்யுபகாரம் செய்யலாம். இனி எனக்கு ராஜ்யத்தில் ஆசை இல்லை. கிடைக்கக் கூடாத தொன்றைக் குறித்து ஆசைப்பட்டு என்ன ப்ரயோஜநம்? ஆசைப் பட்டது கிடைக்கவில்லை என்னும் வருத்தம் ஒன்று தான் மிஞ்சும். நான் பகவானை மறக்கவில்லை. ஆனால் ஸ்வப்நத்தில கண்டது நிறைவேறும் என்று எப்படி நம்ப முடியும்?'' என்றான் அரசன். அவன் குரலில் வருத் தம் த்வனித்தது.

" அரசே! இது என்ன? தாங்களும் இப்படிச் சொல்லுகிறீர்கள். எம்பெருமான் நம்மோடு பேசுவரோ? ஸ்வப்நத்தாலும் நிமித்தங்களாலுந் தான் அவருடைய திருவுள்ளத்தைஅறியலாகும். இன்னும் இரண்டேநாட் களில் நமது துயரெல்லாம் நீங்கும். தாங்கள் சிறிதும் கவலைகொள்ள வேண் டாம்'' என்றான் மந்த்ரி. மற்றைய ஆப்தர்களும் அரசனைத் தேற்றினார்கள்.

இவர்கள் இவ்வாறு ஸம்பாஷித்துக்கொண்டிருக்கும்போதே, திடீரென்று தூரத்தில் திருச்சிந்ந வாத்யத்தின் முழக்கங் கேட்டது. "ஆ! இதென்ன சப்தம்! திருச்சிந்ந வாத்யத்தின் சப்த மல்லவா? ஸ்ரீ அழகிய சிங்கர் எழுந்தருளிவிட்டார். எல்லாரும் எழுந்திருங்கள். நாம் எதிர் கொண்டு சென்று வணங்குவோம்'' என்று கூறிக்கொண்டு அரசன் எழுந் திருந்தான். அவனுடைய துணைவர்களும் கூடஎழுந்திருந்தார்கள். அரச னும் மந்த்ரிகளும் ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹனையும் அவரை எழுந்தருளப் பண்ணிக்கொண்டுவந்த ஜீயரையும் ஸேவித்தார்கள். "இந்த ஜீயர் யார்? ஆந்த்ர தேசத்தி னிடையிலுள்ள இந்தக் காட்டுக்கு ஏன் வந்தார்?'' ஸ்ரீமதாதிவண் சடகோப யதீந்த்ர மஹாதேசிகன் தென் திசையிலுள்ள திவ்ய தேசங்களையெல்லாம் ஸேவித்துவிட்டு, உத்தர தேச யாத்ரையை ஸங்கல்பித்துக்கொண்டு எழுந்தருளியாயிற்று. வழியிலே முகுந்த தேவ ராயருடைய பாக்யவசத்தால் இந்தக் காட்டு வழியாக எழுந்தருளும்படி யாக இருந்தது.

ஸ்ரீ ஜீயர் அரசனை அநுக்ரஹித்தருளினர். அவனும் ஸ்ரீஜீயரை நோக்கி, "ஐயனே! நான் ஆந்த்ர தேசத்தை ஆண்டுவந்த முகுந்ததேவன். காலவசத்தால் எனது நாடு மிலேச்சர் வசமாயிற்று. நானும் என்னுடைய ஆப்தர்களும் இந்தக் காட்டில் துயருழன்று வருகின்றோம். இரண்டு நாட்களுக்குமுன் ஒரு ஸ்வப்நம் கண்டேன். அதில் ஒரு ஸ்ரீ வைஷ்ணவர் தோன்றி, 'அரசனே! நீ வருந்தாதே. ஸ்ரீ அழகிய சிங்கரை ஆச்ரயித்தால் இழந்த ராஜ்யத்தை மறுபடியும் பெறுவாய்' என்று கூறியருளினர். தேவரீர் திருவடியை வந்தடைந்த அடியேனை ரக்ஷித்து இழந்த ராஜ்யத்தை மறுபடியும் நான் அடையுமாறு அநுக்ரஹம் செய்தருள வேண்டும்" என்று வேண்டினன். ஸ்ரீ அழகிய சிங்கருடைய திருவிளையாடல்களுள் இதுவும் ஒன்று என்று திருவுள்ளத்தில் எண்ணிய ஸ்ரீ ஜீயர், அரசனுக்குப் பஞ்ச ஸம்ஸ்காரங்கள் செய்தருளினர்.

இங்கு இப்படியிருக்க: அந்தத் தேசத்தை ஆக்ரமித்திருந்த ம்லேச்சர்கள் பாடு என்ன ஆயிற்று? பல சிங்கங்கள் முழக்க மிட்டுக்கொண்டு தங்கள் மீது பாய்ந்து தங்களைச் சிந்நபிந்நமாகக் கிழித்ததாக ஸ்வப்நம் கண்டு நடுநடுங்கி, 'இந்த ராஜ்யம் நமக்கு வேண்டாம். உயிர் தப்பினல் போதும்' என்று கருதியவர்களாய் இரவோடிரவாக அந்தத் தேசத்தை விட்டு அப்பால் ஓடிவிட்டார்கள். மறுநாள் காலையில் அந்த ம்லேச்சர்களுடைய தலைவனும் காட்டுக்கு வந்து முகுந்த தேவராயரிடம் அவருடைய ராஜ்யத்தை ஒப்பித்துவிட்டுத் தன்னுடைய தேசத்துக்கே சென்றுவிட்டான்.

முகுந்த தேவராயருக்கு உண்டான ஆநந்தத்துக்கு எல்லையில்லை. புதிதாக ஒரு பொருள் கிடைத்ததால் உண்டாகும் ஆநந்தத்தைக் காட்டில் நஷ்டமான த்ரவ்யத்தின் ப்ராப்தியால் உண்டாகும் ஆநந்தமே அதிகமல்லவா? இழந்த ராஜ்யம் மறுபடியும் கிடைப்பதற்குக் காரணமாக இருந்த ஸ்ரீ ஆதிவண் சடகோப யதீந்த்ரர் திருவடிகளிலுண்டான பக்தியின் மேலீட்டால் அவரைப் பன்முறை வணங்கிப் போற்றினன். அவருக்குப் பலவிதமான உபஹாரங்களை ஸமர்ப்பித்தான். எம்பெருமானுக்குப் பலவிதமான திருவாபரணங்களையும் ஸமர்ப்பித்து மகிழ்ந்தான். ஸ்ரீ ஜீயரைத் தன்னுடைய நகரத்துக்கு எழுந்தருளும்படி ப்ரார்த்தித்து, ஒரு தங்கப் பல்லக்கில் அவரை எழுந்தருளப்பண்ணி அந்தப் பல்லக்கை மற்றவர்களோடு தானும் தாங்கிக்கொண்டு ஊர்வலமாகத் தன் நகரத்துக்குச் சென்றான். ஸ்ரீ ஜீயர் திருவடிகளில் அவனுக்கு உண்டான பக்தியின் ப்ரகர்ஷம் தானென்னே!

இந்த வ்ருத்தாந்தம், வாஸந்திகா பரிணய நாடகம் அருளிச்செய்த ஸ்ரீ சடகோப மஹாதேசிகனல் அருளப்பட்ட "பூர்வம் யஸ்து" என்னும் ஸ்லோகத்தில் அநுஸந்திக்கப்பட்டு, ஸ்ரீ ஆதிவண் சடகோப யதீந்த்ர மஹாதேசிகனுடைய மங்களத்தோடும் சிஷ்யர்களால் இன்றும் போற்றப்படுகிறது.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

உபாகர்ம விஷயம்

(1)

[புத்தங்கோட்டகம் ஸ்ரீ. உப. ஸ்ரீநிவாஸாசார்யர்—ஸ்ரீ அஹோபில மட ஆஸ்தாந வித்வான்]

'உபாகர்ம' என்னும் சப்தத்திற்கு 'ஆரம்பம்' என்பது பொருள். ஆரம்பம் என்பது, எல்லாக் காரியங்களுக்கும் ஸம்பாவிதம். ஆனாலும், இங்கு இந்த ஶப்தம் சில காலங்களில், சில தர்ப்பணம் ஹோமம் முதலிய பற்பல அங்கங்களோடு செய்யப் படும் வேதாத்யயநத்தின் ஆரம்பத்தை மாத்ரம் சொல்லுகிறது. ஆகையினால் வேதங்களை அத்யயநம் செய்ய யோக்யர்களான ப்ராம்ஹணன் க்ஷத்ரியன் வைஶ்யன் என்கிற மூன்று ஜாதியார்களான புருஷர்கள், இந்த உபாகர்ம என்கிற வேதாத்யயநத்தினுடைய ஆரம்பத்தை, அதற்கு விதிக்கப்பட்ட அங்கங்களோடு செய்யவேண்டும். அந்த மூன்று ஜாதி புருஷர்களிலும் ப்ரம்ஹசாரி க்ருஹஸ்தன் வாநப்ரஸ்தன் என்கிற மூன்று ஆஶ்ரமிகளும், பத்நீயில்லாத விதுரர்களும் தான் இந்த உபாகர்மாவைச் செய்யவேண்டும். உபநயநம் செய்துகொள்ளாத சிறுவர்களும் ஸங்யாஸிகளும் இதைச் செய்யவேண்டியதில்லை.

இந்த உபாகர்மாவைச் செய்யத் தவறினால் ப்ராயஶ்சித்தம் விதிக்கப்பட்டிருப்பதால், இது நித்யம் என்கிற கர்மாவாகிறது. இந்த உபாகர்மாவை யஜுர் வேதிகளும் அதர்வண வேதிகளும் ஆவணி மாஸத்தின் அமாவாஸ்யைக்கு முந்திய பூர்ணிமையான ஶ்ராவணீ என்கிற திநத்திலும், ருக் வேதிகள் ஆவணி மாஸத்தின் அமாவாஸ்யைக்கு முந்தி வருகிற ஶ்ரவண நக்ஷத்ரத்திலும், ஸாம வேதிகள் ப்ரோஷ்டபத மாஸத்திய ஹஸ்த நக்ஷத்ரத்திலும் செய்யவேண்டியது. உபநயநம் செய்துகொண்ட வர்ஷத்தில் மாத்ரம் கீழே குறிப்பிட்ட திநங்களில் ஸங்க்ரமணம் க்ரஹணம் அதிமாஸம் ஸம்ஸர்ப்பம் மலமாஸம் குரு சுக்ராதிகளுடைய அஸ்தமநம் முதலிய தோஷங்கள் ஸம்பவித்தாலும், அன்று அந்த ப்ரதமோபாகர்மாவைச் செய்யாமல் ப்ரோஷ்டபதி என்கிற ஆவணி அமாவாஸ்யைக்கு அடுத்த பூர்ணிமையில் செய்யவேண்டும். அதிலும் ஷை தோஷங்கள் ஸம்பவித்திருந்தால், ஆஷாடீ என்று சொல்லப்படுகிற ஆடி மாஸத்திய அமாவாஸ்யைக்கு முந்திய பூர்ணிமையில் செய்யவேண்டும். அந்த ஆஷாடீயிலும் ஏதாவது தோஷங்கள் ஸம்பவித்தால், ஶ்ராவணீ என்கிற திநத்திலேயே தோஷத்திற்குப் பரிஹாரமான சாந்தி கர்மாவோடு செய்யவேண்டுமென்பது சாஸ்த்ரங்களின் தீர்மாநம். உபநயநம் செய்துகொண்ட வர்ஷத்திற்கு அடுத்த வர்ஷம் முதல், கீழே குறிப்பிட்ட எவ்வித தோஷங்கள் ஸம்பவித்திருந்தாலும், ஶ்ராவணீ என்கிற பூர்ணிமையில் தான் இந்த உபாகர்மாவைச் செய்யவேண்டும். ஆகையினால், இந்தத் தோஷங்களெல்லாம் ப்ரதமோபாகர்மம் ஒன்றுக்குத் தான் பாதகம் என்று தீர்மானிக்கப்படுகிறது.

இது நிற்க : கீழே சொல்லப்பட்ட அஸ்தமந தோஷ விஷயத்தில் ருக் வேதத்திற்குக் குருவும், யஜுர் வேதத்திற்கு சுக்ரனும், ஸாம வேதத்திற்கு அங்காரகனும், அதர்வண வேதத்திற்குப் புதனும் அதிஷ்டாந தேவதைகளாகையினால், அந்தந்த சாகாதீசர்களான குரு முதலான தேவதைகள் பலிஷ்டர்களாக இருக்கும் ஸமயத்தில், அந்தந்த வேதங்களை ஆரம்பிப்பது உசிதமாகையால், அவர்கள் அஸ்தமநத்தை அடைந்திருக்கும் காலத்தில் அந்தந்த வேதாத்யயநத்தை ஆரம்பிக்கக்கூடாது. அதாவது: குரு அஸ்தமந காலத்தில் ருக் வேதிகளும், சுக்ரனுடைய அஸ்தமந காலத்தில் யஜுர் வேதிகளும், அங்காரனுடைய அஸ்தமநத்தில் ஸாம வேதிகளும், புதனுடைய அஸ்தமநத்தில் அதர்வண வேதிகளும் உபாகர்மாவைச் செய்யக்கூடாது,

ஒருவன் தன்னுடைய வேதத்திற்கு ஈஶ்வர னல்லாத தேவதையின் அஸ்தமநத்தைப் பற்றிக் கவனிக்கவேண்டியது அவஶ்யமல்ல. தன்னுடைய சாகாதீசன் சக்தியோ டிருந்தால் உபாகர்மாவைச் செய்யலாம். அதைப் போலவே,

‘ஶாவாயீமெ ஶக்தியுக்தெ தஜ்ஞாவாயஸ்யநம் ஶுஹ ’

என்று சொல்லியிருப்பதால், ஒரு வேதத்தின் அதீசனுன தேவதை சக்தியற்றதாக இருந்தாலும், அந்த வேதமுடையவன் அக்காலத்தில் உபாகர்மாவைச் செய்யக்கூடா தென்பது ஸித்தமாகிறது.

‘வஹகொ உவெயொ ஹவெஙீஃ ஷொதுஜிதாம்ஸமொஷவி வா ’

என்கிற வசநத்தில் மித்ரனுடைய அம்சத்திலிருக்கிற தேவதைக்குப் பலம் அதிக மென்று சொல்லியிருப்பதாலும், சத்ரு ஸ்தாநத்தி லிருப்பவன் சக்தியற்றவன் என்று ஏற்படுகிறது. ஆகையினுல் இந்த வர்ஷத்தில் ஆடி 30உ யான ஶ்ராவணியில் க்ரஹண தோஷமும், ஆவணி பூர்ணிமையான ப்ரோஷ்டபதியில் யஜுர் வேதாதீச னுன சுக்ரனுக்கு அஸ்தமந தோஷமும், ஆடிமீ 1உ யான ஆஷாட திநத்தில் சுக்ரன் சத்துருவான ஸூர்யனுடைய ஸ்தாநத்தி லிருப்பதால் சக்தியில்லாம லிருப்பதாலும்,

‘காமதுயெஷவி ஷொஷஸ்ஷஜ்ஞ ராவணூாஒவ காமயெசு ’

என்கிறபடி, யஜுர்வேதிகள் ஆடி 30உ யான ஶ்ராவணீ திநத்திலேயே ப்ரதமோபா கர்மான்வ க்ரஹண தோஷ பரிஹாரத்தோடு செய்யவேண்டும். த்விதீயோபாகர்மாவை எல்லோரும் ஶ்ராவணீயிலேயே பண்ணவேணு மென்பதை முன்னமே சொன்னேம்.

சுக்ரனும் ஸூர்யனும் பரஸ்பரம் சத்ருக்கள் என்கிற விஷயம் வராஹமிஹிர ருடைய ப்ரஹஜ்ஜாதகத்தில் (அத்யாயம் 2—ல்)

‘ஶதூ உஜுவிதளஸெஜ்ஜ ஶஶிஜொ மிதூணி ஶெஷா மவெஃ ’

என்று ஸூர்யனுக்கு சுக்ரன் சத்ருவென்றும்,

‘ஸௌஜ்ரொகீ ஸுஹுஜுளஸளே குஜமயெலஶகு ஸஸமொஷாவரீ’

என்கிற வசநத்தில், சுக்ரனுக்கு மிச்சமான ஸூர்ய சந்த்ரர்கள் சத்ருக்கள் என்று சொல்லியிருப்பதால் ஸித்தம். இதை வராஹமிஹிரர் ஹோரா சாஸ்த்ரம் அத். 2-லும் சொல்லுகிருர். சத்ரு ஸ்தாநத்திலிருக்கிற நவக்ரஹம் சக்தியற்றதோடு, ப்ரதிகூல பலன்களேயும் கொடுக்கும் என்கிற விஷயம்,

‘நீவம்மதா ரிவுமஜுஹஜ நஹஸ்ஜுரெநெஜ யஜெ ஜிதாஃ ஶுஹ ஹெஹாநி விநாஶயதி | வாவாநி யாநி ஸதூாம் வரிவயஜுயதி ‖’

என்று ஸாராவளீ என்னும் ஜ்யோதிஷ க்ரந்தத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகை யினுல் சுக்ரன் ஸிம்ஹ ராசியிலிருக்கும்பொழுது சக்தியற்றிருப்பதோடு, விபரீத பலன்களேக் கொடுப்பவன்; ஆகையினுல் ஆஷாட தோஷமுள்ளதாகிறது. ஆகை யினுல் யஜுர் வேதிகள் ப்ரதமோபாகர்மத்தை ஆடியில் 1 உயான ஆஷாடயிலும் செய்வது உசிதமாகாது. ஶ்ராவணியிலேயேதான் செய்யவேண்டும். யஜுர் வேதி களுக்குள் மற்ருெரு பிரிவினரான சுக்ல யஜுர்வேதிகள் விஷயத்தில் ப்ரதமோபா கர்மாவுக்கு க்ரஹணம் முதலிய தோஷம் ஸம்பவித்தால் நிர்ணய ஸிந்துவில்,

‘ஸங்குாதிமஜுஹணம் வாஷவி வளணஜாவஜாம் யஹா ஹவெசு |

உவாகஜுதிஜு வஞஜாம் காயஜும் வாஜஸநெயிஹிஃ ’

என்கிற வசநம் ஸ்ம்ருதி மஹார்ணவத்தி லிருப்பதால், ஶ்ராவண பஞ்சமியில் பண்ண வேண்டுமென்று ஹேமாத்ரியின் அபிப்ராய மென்று எழுதியிருக்கிறது. ருக் வேதி கள் விஷயத்தில் ஷி தோஷத்தில் ஶ்ராவண மாஸத்திய பஞ்சமியோடு சேர்ந்த ஹஸ்த நக்ஷத்ரத்தில் பண்ணவேண்டுமென்று கண்டபூஷணத்திலும் சொல்லப்பட்டிருக் கிறது. ப்ரோஷ்டபதீயான ஆவணி மாஸத்திய பூர்ணிமையில் ருக் வேதத்திற்கு அதீச

னை குருவுக்கு அஸ்தமன தோஷ மில்லாததினாலும், தோஷமில்லாத ப்ரோஷ்டபதியிலும் அவர்கள் செய்யலாம். ஸாமவேதிகளுடைய உபாகர்மாவின் காலமான ப்ரோஷ்டபதீ ஹஸ்த நக்ஷத்ரத்தில் இந்த வர்ஷத்தில் ஒருவித தோஷமும் ஸம்பவிக்காததினால் அவ்விஷயத்தில் விசாரத்திற்கு ப்ரஸக்தி யில்லை.

(2)

ஸ்ரீ உப. P. B. ரங்காசார்யர், அட்வோகேட், கூடலூர்

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா ஸம்பாதக ஸ்வாமி ஸந்நிதிக்கு :

ஜூலைமீ ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியாவில் ஸ்வாமி அழகியசிங்கர் இந்த உபாகர்மம் ஆடிமீ 30உயில் அநுஷ்டிக்கத் தக்கதென்று நியமித்திருப்பதாயும், ஆவணிமீ 28உ பூர்ணிமைக்கு ஶாகாதீஶனை ஶுக்ரனுக்கு மௌட்ய தோஷமிருப்பதால் க்ரகண மிருந்தபோதிலும் ஆடி 30உதான் அநுஷ்டிக்கவேணு மென்றும், அதற்குக் காரணமும் சொல்லப்பட்டிருக்கிறது. த்ருக் ஸித்தாந்த ப்ரகாரம் சுக்ரன் ஆவணிமீ 13உயில் அஸ்தமநமாகி 24உ கிழக்கில் உதயமாகிறதாய் ஏற்படுகிறது. ஸ்வாமி வாக்ய பஞ்சாங்க ரீதியாய் மேல்கண்டபடி நியமித்திருக்கவேணும், திதி நக்ஷத்ரங்கள் நாழிகை வித்யாஸப்பட்டால் எது சரி எது தப்பு என்று ஸாதிக்க முடியாமல் இருக்கும். க்ரகங்களுடைய சாரங்கள் ப்ரத்யக்ஷமாய்க் காணக்கூடியதாகையால் அப்படி ஸாதிக்க முடியாது. அநுபவத்தில் இது வரையில் த்ருக் ஸித்தாந்தம்தான் சரியாய் இருந்து வருகிறது. ஆகையால் ஆவணி 28உ சுக்ரன் ஸூர்யோதயத்துக்குச் சற்றுமுன் நன்றாய்த் தெரியும் என்பதில் ஸந்தேகமில்லை. பெரியோர்கள் அநுஷ்டாநத்தை மாற்றுவது கூடாது என்று நாம் எல்லோரும் வாக்யத்தையே அநுஷ்டித்து வருகிறோமானாலும், இப்படி ப்ரத்யக்ஷமாய்த் தப்பு என்று ஏற்படக் கூடிய கார்யங்களைச் செய்வது சரியா? ஶாஸ்த்ரத்திற்கும் ப்ரத்யக்ஷத்திற்கும் முரண்பாடு வந்தால், ப்ரத்யக்ஷம் பலீயஸ்ஸன்றோ! இதை ஸ்ரீ அழகியசிங்கருக்கு விண்ணப்பம் செய்து நியமநத்தை மாற்ற முடியுமானால் நல்லது.

ஸ்ரீ:

பஞ்சாங்க ஸங்க்ரஹம்

ஸுபாநு ஆவணிமீ

1உ	செவ்வாய்க்கிழமை	—	ஸிம்ஹ ரவி 2-48 சூந்ய திதி.
2உ	புதன்கிழமை	—	சூந்ய திதி.
6உ	ஞாயிற்றுக்கிழமை	—	ஜந்மாஷ்டமி : ஸப்தமி திதி.
7உ	திங்கட்கிழமை	—	அஷ்டமி திதி : முநித்ரய ஸ்ரீ ஜயந்தி.
8உ	செவ்வாய்க்கிழமை	—	ஸ்ரீ பாஞ்சராத்ர ஸ்ரீ ஜயந்தி.
10உ	வியாழக்கிழமை	—	ஸர்வ ஏகாதசி.
14உ	திங்கட்கிழமை	—	ஸர்வ அமாவாஸ்யை.
17உ	வியாழக்கிழமை	—	ஸாமோபாகர்மம்.
25உ	வெள்ளிக்கிழமை	—	ஸர்வ (பரிவர்த்தந) ஏகாதசி.
26உ	சனிக்கிழமை	—	ஸர்வ ஶ்ரவண த்வாதசி.
27உ	ஞாயிற்றுக்கிழமை	—	த்ரயோதசி - சதுர்த்தசி : திதித்வயம்.
29உ	செவ்வாய்க்கிழமை	—	மஹாளய பக்ஷாரம்பம்.
30உ	புதன்கிழமை	—	ஸிம்ஹ க்ருஷ்ண த்விதீயை திதி.
31உ	வியாழக்கிழமை	—	ஸிம்ஹ க்ருஷ்ண த்ருதீயை திதி.

[சென்ற ஸஞ்சிகையில் பஞ்சாங்க ஸங்க்ரஹத்தில் ஆடிமீ 1உ ஶூந்ய திதி என்று அநவதாநத்தால் தவறி எழுதப்பட்டுப் போய்விட்டது. கடக பூர்ணிமா திதி அன்றுதான். பஞ்சாங்க ஸங்க்ரஹ கர்த்தா.]

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீ ந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

செய்திகள்

---

(1)

40-ம் பட்டம்

ஸ்ரீ அழகியசிங்கரின் வார்ஷிக மஹோத்ஸவம்

ஸ்ரீ அஹோபில மட திவ்யாஸ்தாநத்தில் 42-வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்த ராய் எழுந்தருளியிருப்பவரும், சிஷ்யர்களின் ஐஹிக ஆமுஷ்மிக ஶ்ரேயஸ்ஸையே தமக்கு வகுத்த கைங்கர்யமாக எண்ணி அதற்கு அறிகுறியாக அநேக ஸத் கார்யங்களைச் செய்துகொண்டும், தமது திருமேனியிலுள்ள ஶ்ரமத்தை ஈஷத்துக் கூட கவனியாமல் ஸ்ரீ லக்ஷ்மி ந்ருஸிம்ஹனை ஆங்காங்கு எழுந்தருளப்பண்ணிக் கொண்டு போய் அநேக ஜீவராசிகளை உஜ்ஜீவிக்கச் செய்துகொண்டு எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ வண் சடகோப ஸ்ரீரங்க சடகோப யதீந்த்ர மஹாதேசிகனின் திவ்ய நியமநத்தின் பேரில், 40-வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருந்த ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹ திவ்ய பாதுகா ஸேவக ஸ்ரீவண் சடகோப ஸ்ரீ ரங்கநாத சடகோப யதீந்த்ர மஹா தேசிகனுடைய வார்ஷிக மஹோத்ஸவம் துவரிமான் அக்ரஹாரத்தில், ஸுபாநு வர்ஷம் ஆனி மீ 6 வ (20—6—1943) ஆரம்பம் செய்யப்பட்டுப் பத்து தினங்களாய் மிகவும் அதிசயிக்கத்தக்க ரீதியில் நடத்தப்பட்டது. ஆனி மீ 15 வ (29—6—1943) சாற்றுமுறையும் அழகாய் நடந்தது. தினப்படி காலையில் மூலபேரத்திற்கும் உத்ஸவ பேரத்திற்கும் ஸ்தபந திருமஞ்சநமும், வீதி உத்ஸவங்களும், வேத பாராயண அத்யாபக கோஷ்டிகளும், ததீயாராதநமும் அழகாக நடந்தேறின. இந்த உத்ஸவத்தில் உள்ளூரிலுள்ள ஸ்ரீ வைஷ்ணவ மஹா ஜனங்களும், மதுரைப் பட்டணத்திலுள்ள சிஷ்யர்களும், மற்றும் இதர சிஷ்யர்கள் எல்லாரும் காட்டிய உத்ஸாஹம் மிகவும் ஶ்லாகிக்கத் தகுந்தது.

இந்த ப்ருந்தாவந கைங்கர்ய பூர்த்தியை உத்தேசித்து இந்த ஸ்ரீ அழகிய சிங்கர் (42-வது பட்டம்) மிகவும் க்ருபையுடன் அநுக்ரஹித்தருளிய ரூபாய் ஐந்நூறும் செலவு செய்யப்பட்டு ப்ருந்தாவந கைங்கர்யம் பூர்த்தியானது பற்றி, எல்லோரும் ஸ்ரீ அழகிய சிங்கரிடத்தில் க்ருதஜ்ஞதையுடன் கூடியிருக்கக் கடமைப்பட்டவர்களாயிருக்கிறார்கள்.

—காருகுறிச்சி - ஸுந்தரராஜ தாஸன்.

---

(2)

42-ம் பட்டம்

ஸ்ரீ அழகியசிங்கரின் ஸங்கல்ப மஹோத்ஸவம்

ஸ்ரீமதே வேதமார்க்க ப்ரதிஷ்டாபநாசார்யாய பரமஹம்ஸபரிவ்ராஜகாசார்யாய ஸர்வதந்த்ரஸ்வதந்த்ராய வேதாந்தாசார்யாய ஸ்ரீமத்ராமா நுஜஸித்தாந்த நிர்தாரண ஸார்வபௌம ஸ்ரீலக்ஷ்மீ ந்ருஸிம்ஹ திவ்யபாதுகாஸேவக ஸ்ரீவண்சடகோப ஸ்ரீரங்கசடகோபயதீந்த்ரமஹாதேசிகனுடைய (42-ஆம் பட்டம் அழகிய சிங்கர்) சாதுர்மாஸ்ய ஸங்கல்ப மஹோத்ஸவமானது, நாளது ஸுபாநுவஸ்ரீ ஆடிமீ 1வ சனிக்கிழமை தினம் (17—7—43) வீக்ஷாரண்ய க்ஷேத்ர மென்றும் கிங்க்ரஹேமபுரி என்றும் ப்ரஸித்தி பெற்ற

திருவெவ்வுளூரில் ஸ்ரீ அஹோபில மடத்தில் வெகு ஸம்ப்ரமமாக நடைபெற்றது அப்போது தேவனூர் விளாகம் ஸ்ரீ உப. லக்ஷ்மீ நரஸிம்ஹாசார்யர் முதலிய பல வித்வான்களும், மற்றும் பல ஆஸ்திக ப்ரபுக்களும் ஸந்நிஹிதர்களா யிருந்தனர்.

அன்று ப்ராத: காலம் அபிகமநாநந்தரம் சுமார் 7 மணிக்கு ஸ்ரீ அழகிய சிங்கர் சத்ர சாமராதி ஸகல பிருதங்களுடன் ஸ்ரீ ராகவன் ஸந்நிதிக்கு எதிரில் உள்ள தேரடி மண்டபத்துக்கு ஸ்ரீ பூவராகப் பெருமாளை எழுந்தருளப் பண்ணிக் கொண்டு, அங்கு ஸங்கல்ப ஸம்பந்தமான ஸர்வ வைதிக கார்யங்களையும் சாஸ்த்ரப்படி உசித காலத்தில் விஸ்தாரமாக நடத்தியருளி, எல்லோருக்கும் தாம்பூல தக்ஷிணைகள் அளிக்கப்பட்ட பிறகு, தமது கோதிலாத் தாண்மலரைக் கொண்டாடிக்கொண்டிருக்கும் தீதிலா நல்லோர் திரளுடன் ம்ருத் ஸங்க்ரஹணம் பண்ணிக்கொண்டு மடத்துக்கு எழுந்தருளினர். பிறகு திருமுடி விளக்கமாய் நீராட்டம் முதலியன செய்தருளின பின்பு, ஸ்ரீ அழகியசிங்கர், ஸ்ரீ வீரராகவனையும் கனகவல்லித் தாயாரையும் மற்றுமுள்ள ஸந்நிதி எம்பெருமான்களையும் மங்களா ஶாஸநம் செய்துகொண்டு மீண்டும் மடத்துக்கு எழுந்தருளினர். இதனிடையில் அவ்விடம் இம்மஹோத்ஸவத்துக்காக எழுந்தருளியுள்ள ஸ்வாமிகளுக்கும் ஸ்த்ரீகளுக் கும், ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹன் அபிகமநத்தில் அமுது செய்த ப்ரஸாதம் நிரவதிக மாக விநியோகம் செய்யப்பட்டது.

பின்னர் ஸ்ரீ அழகிய சிங்கர், ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹன் திருவோலக்கத்தில் எழுந் தருள, ஸேவார்த்திகள் அனைவரும் உபஹார புரஸ்ஸரம் ஸ்ரீ அழகிய சிங்கரைத் தண் டன் ஸமர்ப்பித்து, "நிவஸந்து ஸுகேநாத்ர மஹர்ஷய: க்ருதாலயா:| யதாஶக்தி ச ஶுஶ்ரூஷாம் கரிஷ்யாமோ வயம் முதா ||" என்று ப்ரஸ்துத சாதுர்மாஸ்ய ஸங்கல்பத்தை அத்திவ்ய தேஶத்திலேயே நடத்தியருளும்படி ப்ரார்த் தித்துக் கொண்டனர். அதன்பின் கோயில், திருமலை, பெருமாள் கோவில், திருநாராயணபுரம் திருவெவ்வுள், ஸ்ரீ அஹோபிலம் முதலிய திவ்ய தேசங்களிலிருந்து அவ்வவ்வெம்பெருமான்களால் அருளப்பட்ட திருமாலை திருப்பரியட்டம் முதலிய ப்ரஸாதங்கள், உபநிஷத் ஸ்வஸ்திவாசந புரஸ்ஸரம் யானை ஸேனை பரிவாரங் களுடன் ஊர்வலமாக எழுந்தருளப்பண்ணிக்கொண்டு வரப்பட்டன.

அநந்தரம், உத்ஸவார்த்தம் எழுந்தருளியிருந்த பாகவதர்கள் அனைவர்க்கும் ததீயாராதநம் வெகு விமர்சையாக நடைபெற்றது. ஸ்த்ரீ புருஷர்கள் உள்பட சுமார் 1000 பேர்களுக்குக் குறையாமல் அமுது செய்தனர். அன்று ஸாயம் ஸ்ரீ வீரராகவன் கருடவாஹநத்தில் ஆரோஹணித்துத் திருவீதிப் புறப்பாடு கண்டருளினர். ராத்ரி சுமார் 10 மணிக்கு ஸ்ரீ அழகியசிங்கர் திருப்பல்லக்கில் எழுந்தருளித் திருவீதி ப்ரமணம் செய்தருளும்படி இருந்தது. சுமார் 11-மணிக்கு மடத்தில் ஸ்ரீ கண்ணன் டோலோத்ஸவம் கண்டருள, ஸ்ரீ அழகியசிங்கரும் பெருமாளை ஹ்ருதயங்கமமாக மங்களாஶாஸநம் செய்து மகிழ்ந்தார். பின்பு ஸ்ரீ அழகியசிங்கர்க்கு, ஸ்ரீ அஹோபிலம் முதலிய திவ்யதேசத் தெம்பெருமான்களின் திருமாலை திருப்பரியட்ட மர்யாதைகள் அருளிப்பாடோடு ஆராதகர்களால் ஸமர்ப் பிக்கப்பட்டன. அதன் பின்னர்: ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹன் அமுது செய்தருளிய ப்ரஸாதங்கள் விநியோகிக்கப்பட்டுச் சுமார் ஒரு மணிக்கு மஹோத்ஸவம் இனிது முடி வடைந்தது. ஸ்ரீ அழகியசிங்கர்க்கு மர்யாதைகள் செய்த ஸ்வாமிகளும், மற்றும் வித்வான்களும் யதார்ஹம் ஸந்மானிக்கப் பெற்றனர்.

இது முதல் இன்னும் இரண்டு மாஸ காலம் ஸ்ரீ அழகியசிங்கர் திருவெவ்வுளூரி லேயே எழுந்தருளி யிருக்கும்படி யிருக்கிறது. —ஒரகடம்-கோ. ஸுதர்ஶந தாஸன்.

---

(3)

வாழ்த்துப் பத்திரம்

[ஸ்ரீ அழகியசிங்கர் நாளது ஸுபாநு வாண்டு ஆடித் திங்கள் முதல் நாள் திருவெவ்வுளூரில் சாதுர்மாஸ்ய ஸங்கல்பம் தொடங்கிக் கண்ணன் டோலோத்ஸவங் கண்டருளுகையில், ஸ்ரீ அழகியசிங்கரின் பாத தூளியும் திருவல்லிக்கேணித் தமிழ்ச் சங்கக் காரியதரிசியும் ஆகிய பந்தல்குடி பாரத்வாஜ மாடபூசி ரெ. திருமலை அய்யங்கார் படித்து ஸமர்ப்பித்தது.]

மாலோலன் மாணடி தொழுதெழும் மாசில் மாமுனியே!

திருவிஞ்சி மேட்டில் பாரத்வாஜ மாடபூசி வமிசத்தில் திருவவதரித்து, மாசில் மனந் தெளி முனிவர் வகுத்த வடகலைக் கடலையும், மாலுகந்த வாசிரியர் திருவாய் மலர்ந்தருளிய தென்கலைச் சலதியையுங் கடந்து, ஞானம் அநுட்டானம் வைராக்கியம் முதலியன நிரம்பப் பெற்று, தாமின்புறுவது உலகின்புறுமாறு செய்யுங் கைம்மாறு வேண்டாக் கடப்பாடுடையராய்த் திகழ்ந்து சொன்ன கண்ணனின் சொற்பயனென்னுமாறு சிங்கவேழ்குன்றத்தானைச் சிறப்புடன் சிறப்பிக்கும் பட்டமேற்று, அவனுகக்கும் வண்ணம் அளவில்லாத் தொண்டாற்றி, அவனியை வாழ்வித்து வரும் தேசிக சிகாமணியே! அடியேன் செய்யும் இச்சிறு விண்ணப்பம் கேட்டருள்க.

மதுராந்தகத் திருப்பதியில் ஆரியக் கல்லூரி நிறுவிய அண்ணலே!

ஓதியோதி யுணருந்தொறு முணர்ச்சியுதவும்வேதத்தின் சுவைப்பயனை நுகர்ந்து மக்கள் நற்கதி யடையும்பொருட்டு இக் கலியுகத்தில் கிருதயுக தர்மம் நடைபெறுமாறு வித்யாலயம் எடுப்பித்த வித்தகனே! ஈதொன்றே ஆறேழ் பட்டத்தமர்ந்து விளங்கும் ஆரிய மூர்த்தியின் அளவுகடந்த அன்பையும் அருளையும் எடுத்துக் காட்ட அமையாதோ? கோளரி மாதவனின் அலகிலா விளையாட்டை யாரே அறிய வல்லவர்?

முற்றுந் துறந்த முக்கோற்பகவ முழு முதலாளியே!

அரங்கத்தரவி னணையானும், அயர்வறு மமரர்கட் கதிபதியும், பேருவகை பூக்க மாலோல வித்வத் ஸதஸ்ஸை நடத்தி ஸ்ரீ பாஷ்யாதிகாரிகளைப் பெருக்கிய பெருந்தகையாளனே! இதுகாறும் இவ்வண்ணம் நடைபெறவில்லை என்ற திண்ணத்தைக் குடிபுகச் செய்த தீர்த்தனே! என் புகழ்கின்ற தேழை?

மறைமுடித் தேசிக மறையினை விளக்கும் மாபுருடனே!

"துய்யதமி ழிருபத்துநான்கிற் பாட்டின் தொகை நாலாயிரமு மடியோங்கள் வாழ்வே" என நம் வேத சிரத் தேசிகனுர் சங்கநாதஞ் செய்ததை நிலைநிறுத்த அன்னர் அறுதியிட்ட பிரகாரம் ஒரு நாலாயிர திவ்ய ப்ரபந்த வெளியீடு இவ்வாழ்வார் மடத்தினின்று தோன்றின் உலகிருளை நீக்கும் என்பது அடியேன் துணிபு. கம்பத்திடைத் தோன்று மாலாய கம்பன் தாமுகந்த வாசிரியரின் வார்த்தைகளைச் செவ்வனே சேமிக்க வருள்புரிவானுக.

அடியார்கட் கருள் பொழியும் அழகிய சிங்கரே!

அன்னையாய் அத்தனய் அடியோங்களை ஆண்டிடும் தன்மையோனே! திருநரசிங்கன் திருவருளால் பல்லாண்டு அரோக திட காத்திரராய் எழுந்தருளியிருந்து அடியார்களை இன்றுபோல் காத்தருள்க.

பொங்கும் மங்கலம் எங்குந் தங்குக!

திருவெவ்வுளூர் }
17—7—'43. }

ப. ரே. திருமலை அய்யங்கார்.

(4)

திருவுருவப் படங்களின் திறப்பு விழா மதுராந்தகத்தில்

ஸ்ரீ மதுராந்தக ஶாஸ்த்ர பாடசாலையில் நமது ஸ்ரீ அழகிய சிங்கருடைய சித்ர படமொன்றும், அப்பாடசாலைக்குத் தலைமை ஸ்தானம் வஹித்து, ஜ்ஞானாநுஷ்டாந வைராக்யங்களில் அந்யாத்ருஶமான சிறப்பு வாய்ந்து எழுந்தருளியிருந்த ஸ்ரீ. உப. திருக்கோட்டியூர் ஸ்வாமியின் உருவப்பட மொன்றும், சென்ற ஆனிமீ" 30வ புதன்கிழமை திநம், முறையே பெடரல் கோர்ட் ஜட்ஜ் ஸ்ரீ. உப. எஸ். வரதாசார்ய ஸ்வாமியாலும், சென்னை மாஜி ஹைகோர்ட் ஜட்ஜ் ஸ்ரீ. உப. வி. வி. ஸ்ரீநிவாஸ ஐயங்கார் ஸ்வாமியாலும் ப்ரதிஷ்டை செய்யப்பட்ட விஷயம் மதுராந்தக வாஸிகளும் பிறரும் அறிந்திருப்பர்.

மஹா ப்ரம்ஹ வித்தாய், ஸத்வகுண நிதியாய், ஔதார்ய குணஶீலராய், ஶிஷ்யர்களுடைய அகவிருளை மாய்ப்பதில் எழில் ஞான விளக்காய், வித்யாபி வ்ருத்தியில் மஹத்தான அபிநிவேஶ முள்ளவராய், 'ஷிஜம ஸஜ்ஜம்வுஊாயெ' என்னும் ஸதாசார்ய லக்ஷணங்களுக்கு லக்ஷ்யமாய், 'குலனருள் தெய்வங் கொள்கை' என்று பவணந்தியார் வகுத்த நல்லாசிரிய இலக்கணங்களுக்கு நிலைய மாய் விளங்கிவரும் நம் அழகியசிங்கர்க்கு, அவரால் நிர்மாணிக்கப்பட்டுள்ள பாட சாலைக் கட்டிடத்தில் அவரது திருவுருவப் படம் ஒன்று ஸ்திர ப்ரதிஷ்டிதமாய் யாவத் காலம் விளங்கிக் கொண்டிருப்பது அநுரூபமும் ந்யாய்யமுமாகும். இப்படத் தோடு, தமது உடல் பொருள் ஆவி மூன்றையும் அர்ப்பணம் செய்து, தம்மை அடுத் துள்ள ஶிஷ்யர்களுக்கு ஜ்ஞாந ப்ரதாநம் செய்து ப்ரின்ஸிபல் ஸ்தாநம் வஹித்துவந்த ஸ்ரீ கோஷ்டிபுரம் ஸ்வாமியின் திருவுருவப் படமும் உடனிருப்பதும் உபபந்நமாகும். இப்படங்களோடு, ஷை பாடசாலையின் மானேஜரும் ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியாவின் ஸம்பாதகருமான ஸ்ரீ. உப. ஸ்ரீ வாஸுதேவாசார்ய ஸ்வாமியின் திருவுருவப் படமும் இவற்றுடன் விளங்கிக்கொண்டிருப்பது அத்யாவஶ்யமும் ஸ்வரூபமுமாகுமென்று ஸ்ரீமான் வி. வி. ஸ்ரீநிவாஸையங்கார் ஸ்வாமி கருதி, ஶில்பியைக் கொண்டு ஸ்வாமியின் திருவுருவப்படத்தையும் வரைவித்து, அன்றை திநமே அம்மண்டபத்தில் ஸ்ரீஅழகியசிங்கர் படத்துக்குப் பார்ஶ்வத்தில் (அந்த நியமநத்தைக் கொண்டு) ப்ரதிஷ்டை செய்தார்.

ஸ்ரீ வாஸுதேவாசார்ய ஸ்வாமியின் கல்யாண குணங்களைத் தனியே புகழ்ந்து கூறவல்லே னல்லேன். அதற்கு மந்தமதியான அடியேன் ஸர்வதா அஶக்தனும் அநர்ஹனு மாவேன். ஸ்வாமி, ஸந்யாஸி துல்யராய் ஜ்ஞாநாநுஷ்டாந வைராக்ய ஸம்பந்நராய், ஸ்ரீ வைஷ்ணவ உலகம் செய்த மாபெருந் தவப் பயனாய், ஸ்ரீ அழகியசிங்கர்க்கு ப்ரதிநிதியாய் அந்த நியமநத்தைக் கொண்டு தமது நீண்ட கால அநுபவத்தால் அழகியதாய்க் கலாசாலையை நிர்மாணம் செய்வித்து நடத்திவரும் அதிகாரியான ஸ்ரீ வாஸுதேவாசார்ய ஸ்வாமிக்கு, மற்றப் படங்களோ டொக்க ஒரு திருவுருவப் படம் இல்லாமற்போவது ஒரு பெருங் குறைதான் என்று திருவுள்ளத் தில் தோன்றிச் செய்துவைத்த வள்ளலாராகிய ஸ்ரீமான் வி. வி. ஸ்ரீநிவாஸையங் கார் ஸ்வாமியின் கல்யாண குணத்தை என்னென்று ரைப்பது! ஸ்ரீமான் ஐயங்கார், ஸ்வாமிக்கு இவ் விஷயத்தைத் தெரிவிக்காமலே இவ்வளவும் செய்து வைத்து, திடீரென்று அன்று ஸ்வாமியின் படத்தை ப்ரதிஷ்டை செய்யப் போவதாக அங்குத் தெரிவித்த வுடனே, இது எதிர்பாராத விஷயமாதலால், ஸ்வாமி பலபடியாலும் திருவுள்ள மிசையாமல் கம்பித்தார். எனினும்: ஸ்ரீமான் ஐயங்கார், ஸ்வாமியின் உருவப் படம் மற்றைப் படங்களோ டொக்க அங்கிருக்கவேண்டிய ஆவஶ்யகத்தையும், ஸ்வாமியின் கல்யாண குணங்களையும், பரமைகாந்தியான இந்த ஸ்வாமி விலக்ஷணமானதோர் வாநப்ரஸ்தாஶ்ரமி யென்றும் பகு விதமாக ஸதஸ்யர்க்கு விஶதமாகக் கூறிப் பின்பு ஸ்வாமியின் படத்தை மஹா உத்ஸாஹத்துடன் திறந்து வைத்தார். தமது முன்னிலையில் தமது உருவப்படத்தை ஒருவர் ப்ரதிஷ்டை செய்வது தமக்கு ஒவ்வாதென்று தாம் கருதியபோதிலும், ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹன் திருவுள்ளக் கருத்து இவ்வாறிருப்பதை, ஸ்வாமியும் மற்றும் யாவரும் 'ஓம்' என்று இசைந்து போற்றுவதைத் தவிர வேறு என்னதான் செய்யக்கூடும்?

—ஒரகடம், கோ. ஸுதர்ஶந தாஸன்.

श्रीः
श्रीमते लक्ष्मीनृसिंहपरब्रह्मणे नमः

"योऽन्तः प्रविश्य मम वाचमिमां प्रसुप्तां
सञ्जीवयत्यखिलशक्तिधरः स्वधाम्ना ।
अन्यांश्च हस्तचरणश्रवणत्वगादीन्
प्राणान्नमो भगवते पुरुषाय तस्मै ॥"

ஸம்பாதகரின் குறிப்புக்கள்

ஸ்ரீ அழகிய சிங்கரின் சாதுர்மாஸ்ய ஸங்கல்பம்

ஸ்ரீ அழகிய சிங்கர் ஸ்ரீலக்ஷ்மீ ந்ருஸிம்ஹனே எழுந்தருளப் பண்ணிக்கொண்டு ஸமஸ்த பரிஜநங்களுடனும் பரிகரங்களுடனும் அநேக திவ்ய தேஶங்களுக்கு ஜைத்ர யாத்ரையாக எழுந்தருளி, ஆங்காங்கு அர்ச்சா ரூபியாக அவதரித்திருக்கும் எம்பெருமானே மங்களாஶாஸநம் செய்துகொண்டும், ஆஶ்ரிதர்க ளெல்லாரையும் அநுக்ரஹித்துக்கொண்டும், சென்ற ஆனிமாஸக் கடைசியில், கநகவல்லீ ஸமேதனய் ஜகத் ரக்ஷணர்த்தம் திருவவதரித்திருக்கும் ஸ்ரீவீரராகவனுடைய ஸந்நிதியாகிற திருவெவ்வுளுருக்கு எழுந்தருளினர். அப்பொழுது ஆஷாட பூர்ணிமை ஸம்பவித்தபடியால், அவ்விடத்திலேயே சாதுர்மாஸ்ய வ்ரதமும் ஆடிமீ 1உ சனிக்கிழமை திநம் அந்தப் பூர்ணிமா திதியில் உபக்ரமிக்கப் பெற்றது. அன்று அநேக ஶிஷ்யர்கள் அவ்விடத்தில் ஸந்நிஹிதர்களாக இருந்தார்க ளென்றும் அந்த உத்ஸவத்தை ஸேவித்து எல்லாரும் க்ருதார்த்ததையை அடைந்தார்க ளென்றும் நாம் அறிகிறோம்.

இக்காலத்தில் ஸத் தர்மாநுஷ்டாநங்களே மிகவும் ம்ருக்யங்களாகிவிட்டன. அபூர்வமாகச் சிற்சில விடங்களில் மாத்ரம் ப்ரஹ்மசாரிகள் வேதாத்யயநம் செய்வதையும், க்ருஹஸ்தர்கள் தேவதாராதந ரூபமான யஜ்ஞாதிகளை அநுஷ்டிப்பதையும், ஸந்யாஸிகள் க்ராமைக ராத்ரமாக ஸஞ்சரித்து ஆஶ்ரிதர்களுக்கு ப்ரஹ்ம வித்யையை உபதேஶிப்பதையும் நாம் பார்க்கிறோம். அநேக கோடி ஜநங்கள் வர்த்தித்து வரும் இந்தப் பாரத வர்ஷத்தில், நமது சிறுவர்களுக்கு ஸதாசாரங்களையும் தைவ பக்தியையும் நமது பெரியோர்களால் காண்பிக்கப்பட்டுள்ள மார்க்கத்தில் போதிப்பிக்கும் குருகுலங்கள் இங்குமங்கும் அத்யபூர்வங்களாகவே காணப்படுகின்

றன. ஸர்வ போக்யமான க்ருஹஸ்தாஶ்ரமத்தை உள்ளபடி நிர்வஹித்துப் பகவதாராதந ரூபங்களான தேவ பித்ரு மநுஷ்ய யஜ்ஞாதிகளைச் சரிவர அநுஷ்டிக்கும் க்ருஹஸ்தர்கள் ஸித்தௌஷதிகள் போல அதிமாத்ரம் துர்லபராகி விட்டார்கள். ஸந்யாஸிகளைப்பற்றி நாம் என் சொல்வோம்? கலியின் க்ஷோபத்தால் க்ருஹஸ்த தர்மங்கள் குறைவடையவே, ஸந்யாஸிகளும் தமது தர்மங்களைச் சரிவர அநுஷ்டிப்பது துஸ்ஸாத்யமாகி விட்டது. ஜநங்களுக்கு ப்ரஹ்ம வித்யையில் விஸ்வாஸம் அற்றுப்போய் விட்டதென்றே சொல்லலாம். இந்த ஸ்திதியில், வரப்போகும் க்ருதயுக தர்மத்திற்குப் பீஜபூதர்களாகச் சில ஸந்யாஸிகள் இன்னும் இருக்கிறார்கள் என்பதே ஆஶ்சர்யாவஹம். இவ்விதம் தர்மாநுஷ்டாநங்கள் அதிமாத்ரம் லோபத்தை அடைந்துவிட்டபடியினாலேயே ஜகத்தில் வ்யாதி துர்ப்பிக்ஷம் சௌர்யம் முதலிய பீடைகள் அதிகரித்து வருகின்றன.

"यत्राष्टाक्षरसंसिद्धो महाभागो महीयते ।
न तत्र संचरिष्यन्ति व्याधिदुर्भिक्षतस्कराः ॥"

[பகவானுக்கு ஸந்தோஷத்தைக் கொடுக்கக்கூடிய வர்ணாஶ்ரம தர்மங்களைச் சரிவரச் செய்துகொண்டு எப்பொழுதும் அஷ்டாக்ஷராநுஸந்தாநத்தால் ஸித்திபெற்ற மஹாபாக்யஶாலியான ப்ரஹ்மவித் எவ்விடத்தில் கொண்டாடப்பட்டு வருகின்றானோ அவ்விடத்தில் 'வ்யாதி துர்ப்பிக்ஷம் திருட்டு' என்று வ்யவஹரிக்கப் படக்கூடிய அநிஷ்டங்களொன்றும் கொஞ்சமேனும் தலைகாட்டமாட்டா] என்னும் மஹர்ஷி வாக்யம் பொய்யாகுமோ? நமது ஸநாதந தர்மத்தின் ஏற்றம் இதுவே. ஒரு தர்மத்தை எவன் சரியாக அநுஷ்டிக்கிறானோ அந்தத் தர்மம் அவனை மாத்ரம் ரக்ஷிக்கின்றது என்பது இல்லை; அது அவனையும், அவனைச் சார்ந்து நிற்பவர்களையும், அவன் வஸிக்கும் தேஶம் அவனுடைய காலம் எல்லாவற்றையும் பாவநம் செய்கின்றது. இதுவே அத்தர்மத்தின் மஹிமை. இது வஸ்து ஸ்வபாவமே. பாலின் குணத்தைத் தெரிந்தோ தெரியாமலோ, அதை உட்கொள்ளுகிறவனுக்கு எப்படி அது ஆரோக்யத்தைச் செய்கின்றதோ, அப்படியே ஒருவனால் செய்யப்படும் தர்மாநுஷ்டாநம் ததீயர்களையும் காப்பாற்றுகின்றது. அதிலும் நிஷ்காமமாய்க் கேவலம் பகவந் முகோல்லாஸத்தை உத்தேஶித்தே ப்ரஹ்ம வித்துக்களாற் செய்யப்படும் பகவதாராதந ரூபமான கைங்கர்யமெல்லாம் ஜகத்தின் க்ஷேமத்திற்குக் காரணமாகின்றது என்பதைச் சொல்லவும் வேண்டுமோ? நமது ஸ்ரீ அழகிய சிங்கர் அப்படிப்பட்ட ஒரு ப்ரஹ்மவித்.

"औदार्यैणावगच्छामि निधानं तपसामिमम्।"

என்கிறபடி அவருடைய திருமேனியையும் ஸௌம்யமான திருமுக மண்டலத்தையும் ஸக்ருதாவ்ருத்தி தண்டன் ஸமர்ப்பித்த மாத்ரத்தாலே, அவர் ஒரு பெரிய தபோநிதி என்பது நன்கு விளங்கும். அப்படிப்பட்ட மஹானால் அநுஷ்டிக்கப்படும் தர்மம் லோக ஹிதமாகாமலும் இருக்குமோ?

दीनानुकंपया तेन क्रियते कर्म दुष्करम्।

அந்த மஹான் பல்லாண்டு பல்லாண்டாக எழுந்தருளி யிருக்க வேண்டுமென்பதே நம்முடைய ப்ரார்த்தனை.

* * * *

ஸ்ரீ மடத்துப் பாடஶாலையில் ஓருத்ஸவம்

ஸ்ரீ மதுராந்தக ஶாஸ்த்ர பாடஶாலையில் நமது ஸ்ரீ அழகிய சிங்கருடைய ப்ரதிக்ருதி அடங்கிய சித்ர பலக மொன்றும், அந்தப் பாடசாலைக்கு ப்ரதமாத்யக்ஷோபாத்யாயரா யிருந்த ஸ்ரீ. உப. வே. திருக்கோட்டியூர் ஸௌம்ய நாராயணாசார்ய ஸ்வாமியின் சித்ர படமொன்றும், சென்ற ஆனிமீ 30வ புதன்கிழமை திநம் ப்ரதிஷ்டை செய்யப்பட்டன. பெடரல் கோர்ட் ஜட்ஜ் ஸ்ரீ. உப. வே. எஸ். வரதாசார்ய ஸ்வாமி ஸ்ரீ அழகிய சிங்கருடைய படத்தையும், மதராஸ் மாஜி ஹைகோர்ட் ஜட்ஜ் ஸ்ரீ. உப. வி. வி. ஸ்ரீநிவாஸ ஐயங்கார் ஸ்வாமி ஸ்ரீ திருக்கோட்டியூர் ஸ்வாமியின் படத்தையும் திறந்து வைத்தார்கள். மதுராந்தக வாஸிகளான மஹாங்க ளெல்லாரும் அப்பொழுது அவ்விடம் எழுந்தருளி யிருக்க, ஸ்ரீ அஹோபில மடம் ஸ்ரீ கார்யம் ஸ்வாமி, அநர்க்கமான அதிதிகளாக அன்று அங்கே விஜயம் செய்த ஆஸ்திக ப்ரபுக்களான அந்த இரண்டு மஹாங்களுக்கும் ஸ்வாகதம் சொல்லி நல்வரவேற்றார். அதற்குப் பிறகு ஸ்ரீ. உப. வரதாசார்யர், ஸ்ரீ அழகியசிங்கரின் ஜ்ஞாநத்தையும் ஔதார்யத்தையும் வித்யாபிவ்ருத்தியில் அவருக்கு இருக்கும் மஹத்தான அபிநிவேஶத்தையும் பஹுவாகக் கொண்டாடி, இந்தப் பாடஶாலையின் ஸ்தாபநத்தால் அவர் செய்திருக்கும் பரமோபகாரத்தை ஒருபொழுதும் மறவாமல் இருக்கும்படி அவருடைய ப்ரதிக்ருதியை அந்தப் பாடஶாலையில் ஸ்தாபிப்பது மிகவும் உசிதமென்று வற்புறுத்திப் பேசினார். ஸ்ரீ. உப. வி. வி. ஸ்ரீநிவாஸ ஐயங்கார் ஸ்வாமி, ஸ்ரீ திருக்கோட்டியூர் ஸ்வாமியின் ஜ்ஞாநத்தையும் ஆத்ம குணத்தையும் மிகவும் ஶ்லாகித்து,

அவருடைய ப்ரதிக்ருதியைப்ரதிதிநமும் ஸேவித்து வந்தாலே அந்தப் பாடஶாலையில் அந்வயித்திருக்கு மெல்லாருக்கும் அந்த ஸ்வாமியின் குணம் க்ரமேண ஸங்க்ரமிக்கக்கூடும் என்பதை உத்தேஶித்து அந்தப் படம் அவ்விடத்தில் ஸ்தாபிக்கப்படுகிறதென்று சொல்லி, இத்தகைய மஹான்களுடைய ஸந்தத அநுஸந்தாநம் எல்லாருக்கும் ஶ்ரேயஸ்ஸைச் செய்யவேண்டு மென்று தமது மநோரதத்தை வெளியிட்டார். பிறகு ஸ்ரீ அழகிய சிங்கருடைய ப்ரதிக்ருதியை எழுதின ஸ்ரீ ராகவராவ் என்னும் ஶில்பியின் ஸாமர்த்யத்தையும் ஶக்தியையும் ஹார்த்தமாக ஸ்துதித்தார். பிறகு பாடஶாலையின் அத்யக்ஷரான தேவனார்விளாகம் ஸ்ரீ. உப. லக்ஷ்மீ நரஸிம்ஹாசார்ய ஸ்வாமி, அன்று இந்த உத்ஸவத்தை நடத்திவைக்க க்ருபையுடன் அவ்விடம் எழுந்தருளின இரண்டு ப்ரபுக்களுக்கும் பாடஶாலாதிகாரிகளின் க்ருதஜ்ஞதையை ஆவிஷ்கரிக்க, அந்த ஸங்கம் இனிது முடிந்தது.

இந்த ஸங்கம் நடந்த திநம் பெரியதொரு உத்ஸவ திநமாகவே இருந்தது. ப்ரஹ்மவிதக்ரேஸரர்களான இரண்டு மஹான்கள் அன்று நடக்கவேண்டிய கொண்டாட்டத்திற்கு விஷயீபூதர்கள்; அந்தக் கொண்டாட்டத்தை நடத்திவைக்க ஸம்மதித்து வந்திருப்பவர்களோ நமது வைஷ்ணவ குலத்திற்குத் திலகமாயும் லௌகிக ப்ராபவத்தில் அத்யுந்நதமான பதவியை அடைந்தவர்களாயும் ஸத்வாதிக்யத்தால் அலங்க்ருதர்களாயு மிருக்கும் இரண்டு மஹா ப்ரபுக்கள்; அன்று ப்ரத்யக்ஷமாய் அநுபவிக்கப்படப் போகும் வஸ்துவோ, இக்காலத்தில் உயர்ந்த வர்த்திகா நைபுண்யம் பெற்றவர்களுள் ஒருவரான ஶில்பி ஶ்ரேஷ்டரால் எழுதப்பட்ட ஒரு சித்ர படம்; அநுபவிதாக்களாக அங்கு வந்திருந்த ஜநங்களும் ஆநந்தத்தை நிர்த்துஷ்டமாக அநுபவிக்கும்படி செய்யக்கூடிய ஸத்வ குணம் பொருந்திய நிர்மத்ஸரர்களான வைஷ்ணவோத்தமர்கள். இந்த ஸம்ருத்தியுடன் நடக்கும் கொண்டாட்டம் பெரியதொரு உத்ஸவமாக இராமல் வேறு எவ்விதம் இருக்கக்கூடும்? ஸ்ரீ அழகியசிங்கருடைய படத்தின் ஶோபை இந்த உத்ஸவத்திற்கு நிறம் கொடுத்ததென்று சொல்ல வேண்டும். அதன் ஸம்ஸ்தாந மாதுர்யத்தையும் அதில் தென்படும் ஹாவாநுப்ரவேஶத்தையும் பார்த்து ஆஶ்சர்யம் அடையாதவர் ஒருவரு மில்லை. ஸ்ரீ அழகியசிங்கர் ஸாக்ஷாத்தாக எதிரில் எழுந்தருளி யிருப்பதாகவே தோன்றிற்று. ஸ்ரீ ராகவ ராவ் என்னும் இந்த நிபுண ஶில்பியைப் பகவான் கடாக்ஷித்து, இன்னும் இம்மாதிரியான மஹான்களுடைய படங்களை நம்முடைய

மநஸ்ஸுக்கு த்ருடமான ஆஶ்ரயமாகுமாறு எழுதிக் கொடுக்கும் படி அவருக்கு ஐஹிக ஆமுஷ்மிக ஸௌகர்யங்களை யெல்லாம் பூர்ணமாக அநுக்ரஹிக்க வேண்டுமென்று ஸ்ரீஶரண்யனை நாம் ஹார்த்தமாக ப்ரார்த்திக்கிறோம்.

* * * * *

'விஶிஷ்டாத்வைத வேதாந்தம்' என்னும் பெயருடன் இங்க்லீஷ் பாஷையில் எழுதப்பட்டுள்ள ஓர் வேதாந்த க்ரந்தத்தை நாம் வரப் பெற்றோம். அது, ஸ்ரீமான் பி. என்.

"விஶிஷ்டாத்வைதம்" ஸ்ரீநிவாஸாசார்யர் என்னும் இங்க்லீஷ் படித்த ஒரு வித்வானால் எழுதப்பட்டது.

அந்த வித்வான் இங்க்லீஷ் பாஷையில் 'எம்.ஏ.' என்று வ்யவஹரிக்கப்படும் பிருது பெற்றவர்; பாஶ்சாத்யர்களுடைய ஆத்ம வித்யைப் பற்றிய ஶாஸ்த்ரங்களில் நிஷ்ணாதர்; நம்முடைய வேதாந்த ஶாஸ்த்ரங்களின் விஷயங்க ளெல்லாவற்றையும் தகுந்த ஆசார்ய முகமாக க்ரஹித்தவர்; நமது அத்யாத்ம ஶாஸ்த்ரத்தில் உண்மையான விஶ்வாஸம் கொண்டவர்; விஷயங்களின் ஸாராஸார விவேசநத்தை ருஜுவாகச் செய்வதில் அவருக்கு விஶேஷித்த ஸாமர்த்யமுண்டு. இவ்வளவு குணங்கள் அவரிடத்தில் பூர்ணமாக நிறைந்திருக்கிறபடியால், இம்மாதிரியான ஒரு க்ரந்தம் இயற்றுவதற்கு அவருக்கு அதிகாரம் உண்டென்பது சொல்லாமலே விளங்குமன்றோ?

இந்த க்ரந்தத்தில், நமது வேதாந்த ஶாஸ்த்ரங்களில் விசாரிக்கப்படும் தத்வ ஹித புருஷார்த்தங்கள் என்னும் மூன்று விஷயங்களே விசாரிக்கப்படுகின்றன. தத்வத்தை விசாரிக்கும் பொழுது, ப்ரஹ்ம ஶப்தத்தின் அர்த்தத்தை ஶோதிக்கப் புகுந்து, நிர்க்குண ப்ரஹ்மம் ஸகுண ப்ரஹ்மம் என்று இரண்டு வித ப்ரஹ்மத்தைக் கல்பிப்பதற்கு ப்ரமாணம் இல்லையென்றும், அப்படிக் கல்பிப்பது யுக்திக்கும் விருத்த மென்றும் விவரித்துக் காட்டி, பிறகு 'ப்ரஹ்மம் ஜகத்திற்கு ஆதாரம், நியந்தா, ஶேஷி' இத்யாதியான வசநங்கள் நமது ஸித்தாந்த ப்ரகாரம் என்ன அர்த்தத்தைக் குறிக்கின்றன வென்பதை விளக்கி, பிறகு ஹிதத்தை ப்ரஸ்தாவிக்கும் காலத்தில் கர்மயோக ஜ்ஞாநயோக பக்தியோகங்களின் ஸ்வரூபத்தையும் அவைகளின் ப்ரகாரங்களையும் விவரித்து, அதற்குப் பிறகு பரம புருஷார்த்த ரூபமான மோக்ஷம் எப்படிப்பட்டது என்பதையும் இன்னும் அது ஸம்பந்தங்களான மற்றை விஷயங்களையும் ஶோதித்து, இவைகளைப் பற்றி விஶிஷ்டாத்வைதிகளாற் செய்யப்

பட்டுள்ள நிர்ணயங்களே ஸமஞ்ஜஸமாக இருக்கின்றனவென்று நிரூபித்திருக்கிறார். ஸம்ஸ்க்ருதம் தெரியாமல் கேவலம் பாஷாந்தரத்தை மாத்ரம் அப்யஸித்திருக்குமவர்களுக்கு நமது ஸித்தாந்தத்தை உள்ளபடி அறிவிப்பதில் இந்த க்ரந்தம் மிகவும் உபகாரகமாகும். இதைத் தவிர்த்து, பாஸ்சாத்ய வித்வான்களால் இம்மாதிரியான அதீந்த்ரிய விஷயங்களில் எவ்வித நிர்ணயங்கள் செய்யப்பட்டிருக்கின்றனவோ, அவைகளில் தென்படும் அஸாதுத்வமும் நன்கு இந்த க்ரந்தத்தில் உபபாதிக்கப்பட்டிருக்கிறது; ஆதலின், 'அவைகளே ஸாதுவான நிர்ணயங்கள்' என்று ப்ரமித்திருக்கும் நமது பாலர்களுக்கு இது பெரியதொரு கைவிளக்காகும் என்பதில் ஆக்ஷேபமில்லை.

ந்ருஸிம்ஹாவதாரச் செய்யுள்

மாதம் பத்துக் கொங்கையும் மல்குற்றேரும் வயிறுமில்லை
மாதம் பத்துக் குறியுங் கண்டிலேம் வந்து தோன்றினைபூ
மாதம் பத்துக் கெதிர்மார்பா வரங்கத்து வாழ்பரந்தா
மாதம் பத்துக் கருத்தில்லார் பிறப்பென்பர் வையகத்தே.

—திருவரங்கத்தந்தாதி : 61.

இதன் பொருள்:—தாமரை மலரில் வீற்றிருக்கிற திருமகளாரது கண்களுக்கு இலக்காய் விளங்குகின்ற திருமார்பின் அழகையுடையவனே; திருவரங்கத்தில் நித்யவாஸம் செய்கின்ற பரந்தாமனே! பெரிய தூணிலே (கர்ப்பகாலமாகிய) பத்து மாதத்திற்கு முரிய (மசக்கைநோய், உடல் விளர்த்தல், வயிறு பருத்தல் முதலிய) கர்ப்ப சின்ஹங்களையும் (அத்தூணினிடம்) கண்டோமில்லை; (அங்ஙனமிருக்கவும்) (தூணிலிருந்து நரசிங்க மூர்த்தியாக) வந்து அவதரித்தாய்; (இந்நுட்பத்தை அறியாமல்) தம்மனத்தில் (உன் விஷயமான பக்தியில்லாதவர்கள், பூமியிலே (உனக்குக் கர்மவஶத்தால் நேர்ந்த) பிறப்பென்று (அதனைச்) சொல்வார்கள்.

சாதாரண பிறப்புக்குரிய சின்ஹ மொன்றுமில்லாமல் உனது நரசிங்காவதாரம் விலக்ஷணமாயிருக்கவும், அதனையும் உட்படப் பிறப்பென் றிகழ்வது, உன் பக்கல் பக்தியில்லாதவர்கள் அவதார ரஹஸ்ய ஜ்ஞான மில்லாமையாற் சொல்லும் பேதமைச் சொல்லே யென்பது கருத்து.

"மூலையானது மில்லை கர்ப்பக் குறியுமில்லை முளைத்தாயே ஒரு தூணில்
மலைவாயுலகத்தோர் பிறந்தான் பிறந்தான் என்பர் வாய்க்குண்டோ என்வார்த்தை வீணில்"

எனும் இராமநாடகக் கீர்த்தனை (கவந்தன் துதி) இச்செய்யுட் கருத்தை ஒருசார் அடியொற்றியதாகும்.

—ஒரகடம் கோ. ஸுதர்ஶந தாஸன்.

यस्य ब्रह्म च क्षत्रं च उभे भवत ओदनः ।
मृत्युर्यस्योपसेचनं क इत्था वेद यत्र सः ॥ २५ ॥

॥ इति द्वितीयवल्ली ॥

[ப - ரை.] **दुश्चरितात्** - [ஶ்ருதி ஸ்ம்ருதிகளில் ப்ரதிஷித்தங்களாயிருக்கும்] பாப கர்மங்களிலிருந்து, **अविरतः** - ஒழியாதவனும், **अशान्तः** - [காம க்ரோதாதிகளிலிருந்து] ஶாந்தி அடையாதவனும், **असमाहितः** - [லௌகிக வ்யாபாரங்களினால்] சலித்துக் கொண்டிருக்கும் சித்தத்தை உடையவனும், **अशान्तमानसः**-ஶாந்தி அடையாமல் இருக்கும் மநஸ்ஸை உடையவனுயு மிருப்பவன், **एनम्** - இந்தப் பரமாத்மாவை, **प्रज्ञानेन** - [கேவலம்] பரமாத்ம ஜ்ஞாநத்தால் மாத்ரம், **नाप्नुयात्** - அடைய மாட்டான்.

பரமாத்மஜ்ஞாநம் பக்தியுடன் கூடியிருக்கும் பக்ஷத்தில், துஶ்சரிதாதிகளில் ப்ரவ்ருத்தி ஸம்பவிக்கமாட்டாது. பக்தியற்ற கேவல ஜ்ஞாநம் மாத்ரம் இருந்தால் பாபங்களில் நோக்கம் உண்டாகலா மாகையால், அந்த ஜ்ஞாநம் பரமாத்ம ப்ராப்திக்கு ஸாதநமாகமாட்டாது என்பது இவ்விடத்தில் சொல்லப்படுகின்றது.

"अपि चेत्सुदुराचारो भजते मामनन्यभाक् ।
साधुरेव स मन्तव्यः ॥"

[எவ்வளவு துராசாரங்கள் இருந்தபோதிலும், ஒருவனுக்குப் பக்தி மாத்ரம் என்னிடம் பூர்ணமாக இருக்கும் பக்ஷத்தில், அவனைப் பூஜார்ஹனென்றே கொண்டாட வேண்டும்] என்று ஸ்ரீ கீதாசார்யன் அநுக்ரஹித்திருப்பதும்,

"क्षिप्रं भवति धर्मात्मा ॥"

[அந்த உயர்ந்த பக்தி வந்த உத்தர க்ஷணத்திலேயே அவன் தர்மாத்மாவாக ஆய்விடுவன்] என்பதை உத்தேஶித்தே சொல்லப்பட்டது.

---

25. முதலில் (18—19) இரண்டு மந்த்ரங்களால் ப்ரத்யகாத்ம ஸ்வரூபத்தை விளக்கி, பிறகு அந்த ப்ரத்யகாத்மாவுக்கும் ஆத்மாவாக இருக்கும் பரமாத்ம ஸ்வரூபத்தை '**अणोरणीयान्**' இத்யாதியான மந்த்ரத்தால் ஒருவாறு விளக்கி, அதற்குப் பிறகு அது அத்யந்தம் அலௌகிகமானதால் அது நம்முடைய ப்ரயத்நத்தால் அடையப்படக் கூடாதது என்பதைச் சொல்லி, பிறகு அப்படி அது பகவதநுக்ரஹத்தாலேயே அடையத்தகுந்த தாகையால் அதற்கு அந்தப் பகவதுபாஸநமே உபாயமென்பதையும், அந்த உபாஸநத்திற்கு அங்கமாகச் சில தர்மங்கள் அநுஷ்டிக்கப்படவேண்டு மென்பதையும் இந்த உபநிஷத் உபதேஶித்தது. இனி இந்தக் கடைசி மந்த்ரத்தால், 'அந்தப் பரமாத்மாவின்

ப்ரகாரம் இப்படிப்பட்டது என்பதை ஒருவரும் பூர்ணமாக அறியார்' என்று சொல்லி இரண்டாவது வல்லியை முடிக்கின்றது.

இந்த மந்த்ரத்திற்கு ஆபாததః தோன்றும் பொருளாவது :— 'எவனுக்கு ப்ராஹ்மண க்ஷத்ரிய ஜாதி இரண்டும் ஆஹாரமோ, எவனுக்கு ம்ருத்யுவானவன் உபஸேசநமோ (அந்நத்துடன் சேர்க்கப் பெற்று உட்கொள்ளப்படும் வஸ்துவோ), அவனுடைய ப்ரகாரம் எப்படிப்பட்டது என்பதை யார் அறிவார்?' என்பதுதான். இவ்விடத்தில் 'அந்நமென்று எது வ்யவஹரிக்கப்படுகின்றது? ப்ராஹ்மண க்ஷத்ரிய ஜாதிகள் அந்நமாக வ்யவஹரிக்கப்படுவானேன்? உபஸேசந மென்றால் என்ன? ம்ருத்யு எவ்விதம் உபஸேசந மாவன்?' என்னும் கேள்விகள் உதிக்கின்றபடியால், அந்தக் கேள்விகளுக்குச் சரியான ஸமாதாநம் கிடைக்குமாறு ஆசார்யர்கள் இந்த மந்த்ரத்தை வ்யாக்யானித்திருக்கிறார்கள்.

[ப-ரை.] **यस्य**-எவனுக்கு, **ब्रह्म च क्षत्रं च उभे**-ப்ராஹ்மண க்ஷத்ரிய ஜாதிகளாகிற இந்த இரண்டு ஜாதிகளும் [அதாவது: ப்ராஹ்மண க்ஷத்ரியர்கள் முதலான ஸகல சராசரங்கள் அடங்கிய ஜகத் முழுவதும்], **ओदनः** - உட்கொள்ளக்கூடிய வஸ்துவாக [ஸம்ஹரிக்கப்படத் தக்கதாக], **भवतः** - இருக்கின்றனவோ ; **यस्य** - எவனுக்கு, **मृत्युः** - [ஸகல ஜகத்தின் ஸம்ஹாரத்துக்கும் உதவியா யிருக்கும்] ம்ருத்யுவானவன், **उपसेचनम्** - [அந்நத்திற்கு ருசியைக் கொடுத்துக்கொண்டு ஸ்வயமும் புஜிக்கப்படத் தக்கதான] உபஸேசந மாகின்றானோ, **सः** - அவன், **यत्र** - எந்த ப்ரகாரத்தில் இருக்கிறான் [அதாவது: எந்த ப்ரகாரங்களுடன் கூடினவனாக இருக்கிறான்], என்பதை, **इत्था** - இப்படிப்பட்டதென்று, **को वेद** - எவன் அறிவான்?

ब्रह्म च क्षत्रं च - இந்த இரண்டு பதங்களும் ப்ராஹ்மண க்ஷத்ரிய ஜாதிகளைக் குறிக்கும். இதற்கு, 'அந்த இரண்டு வர்ணங்களைச் சேர்ந்தவர்கள் முதலான ஸகல சராசரங்கள் அடங்கிய ஜகத்' என்று பொருள் கொள்வது எப்படியென்றால்: 'ப்ரஹ்மமும் க்ஷத்ரமும் ஓதநம் [ஆஹாரம்] என்று சொல்லப்பட்டிருக்கின்றது. அந்த இரண்டு ஜாதிகளும் ஒருவனுக்கும் ஸாக்ஷாத் ஆஹாரமாக மாட்டா. ஆகையால், ஓதநம் என்னும் ஶப்தத்திற்கு வேறு பொருள் கொள்ளவேண்டும். அதற்குப் போக்யம் என்றும் நஶிக்கப்படத் தகுந்தது என்றும் இரண்டு பொருள்கள் கொள்ளக் கூடும். அவைகளுள் எதைப் பொருளாகக் கொண்டாலும், அந்த இரண்டு ஜாதிகள் மாத்ரம் ஒருவனுக்கும் போக்ய வஸ்துவாகவாவது நஶிக்கப்படத் தகுந்த வஸ்துவாகவாவது இல்லையாகையால், அந்த ஜாதிகளைக் குறிக்கும் ஶப்தங்களை அந்த ஜாதி முதலான ஸகல ஜகத்தையும் குறிப்பனவாக எடுத்துக் கொள்வதே ஸங்கதமாகும். அப்படியானால் போக்யமென்னும் அர்த்

தத்தை த்யஜித்துவிட்டு விநாஶ்யம் என்னும் அர்த்தத்தைக் கொள்வதேன்? என்ருல், பின்வரும் 'ம்ருத்யு உபஸேசந மாகிருன்' என்று சொல்வது போக்ய மென்னும் அர்த்தத்தில் அஸங்கதமாயும் 'விநாஶ்யம்' என்னும் அர்த்தத்தில் ஸங்கதமாயும் இருக்கின்றதாகையால் இதுவே இவ்விடத்தில் விவக்ஷிதமென்று சொல்வதே உசிதமாகும்' என்பதுதான். கிற்க: ப்ரகரணமும் 'ஸம்ஹர்த்ருத்வம்' என்னும் பொருளே ஸங்கதம் என்பதைக் குறிக்கின்றது. **"सोऽध्वनः पारमाप्नोति तद्विष्णोः परमं पदम्"** என்னும் பின்வரும் வாக்யம் விஷ்ணு கர்த்ருகமான கார்யமே விவக்ஷிதம் என்பதை விளக்குகின்றது. அப்படி விஷ்ணு கர்த்ருகமான கார்யமும் சராசரங்கள் அடங்கிய ஜகத்தின் ஸம்ஹாரமே தவிர்த்து, கேவலம் ப்ரஹ்ம க்ஷத்ர வர்ண த்வய பக்ஷணமில்லே.

उपसेचनम् - **'स्वयमद्यमानत्वे सति अन्यस्य अदनहेतुः यत्तदुपसेचनम्'** என்று இந்தப் பதத்தின் அர்த்தத்தைப் பெரியோர்கள் விவரித்திருக்கிருர்கள். நாம் புஜிக்கும் அந்நத்திற்குத் தயிர் முதலியவை உபஸேசநமாகும். ம்ருத்யு தன்னைத் தவிர்த்த மற்றை எல்லாவற்றுக்கும் நாஶஹேதுவாக இருந்துகொண்டு தானும் முடிவில் நஶிக்கப்படுகிருனுகையால், ம்ருத்யுவை உபஸேசநமாகப் பேசுவது உபபந்நமே. இப்படி ம்ருத்யுவும் உட்கொள்ளப்படத் தகுந்தவனென்றும் உபஸேசந மாகிருனென்றும் சொல்லப்பட்டிருக்கிறபடியால், அந்த ஸாமர்த்யத்தாலே ப்ரஹ்ம க்ஷத்ர ஶப்தங்கள் ஸகல ஜகத்தையுமே குறிக்கின்றன என்று வ்யாக்யாநம் செய்வதே ஸங்கதம்.

இரண்டாவது வல்லீ முற்றிற்று.

॥ अथ तृतीयवल्ली ॥

हरिः ओम्।

ऋतं पिबन्तौ सुकृतस्य लोके गुहां प्रविष्टौ परमे परार्ध्ये ।
छायातपौ ब्रह्मविदो वदन्ति पञ्चाग्नयो ये च त्रिणाचिकेताः ॥ १ ॥

மூன்ருவது வல்லீ

இரண்டாவது வல்லீ, முடிவில், பரமாத்மா அத்யந்தம் அலௌகிகனுகிறபடியால், அவன் துர்ஜ்ஞேயன் என்று சொல்லி, "**क इत्था वेद यत्र सः**" [அவன் மஹிமையை ஒருவனும் அறியான்] என்று அவனுடைய துர்ஜ்ஞேயத்வத்தை வற்புறுத்தி முடித்தது. 'அப்படி அவன் துர்ஜ்ஞேயனுனல் அவனை நாம் உபாஸிப்பது எப்படி?' என்று ஶங்கை பிறக்க, உபாஸகனுக இருக்கும் ஜீவன் உபாஸ்யனுக இருக்கும் பரமாத்மா இருவரும் ஒரே குஹையில் [ஹ்ருதய குஹையில்] அநுப்ரவேஶித்திருப்பதால் பரமாத்மாவை உபாஸகன் ஸுகமாக உபாஸிக்க ஶக்தனே யென்று முதலில் இரண்டு மந்த்ரங்களால் விவரித்து, பிறகு மூன்ருவது மந்த்ரம் முதலாக ஒன்பதாவது மந்த்ரம் பர்யந்தம் ஸம்ஸாரமாகும் மார்க்கத்திற்குப் பாரமாயிருக்கும் பரமாத்மஸ்வரூபத்தை அடைவதற்கு என்ன பரிகரம் வேண்டுமோ அந்தப் பரிகரத்தை உபதேசித்து, பிறகு ப்ராப்தாவாக இருக்கும் ஜீவாத்மாவின் ஸ்வரூபத்தை விஶதமாக விளக்குகின்றது. இதற்கு நடுவில், ஶரீரம் முதலியவைகளை வஶீகரித்தல் வேண்டுமென்றும் அப்படி வஶீகரிக்கப்படவேண்டிய விஷயத்தில் எவை எவை ப்ரதாநங்களென்றும் வஶீகரண ப்ரகாரம் எதுவென்றும் விளக்கிக் கடைசியில் அதிகாரி புருஷர்களை அபிமுகீகரித்துப் பேசி உபதேஶத்தை உபஸம்ஹரிக்கிறது.

1. [ப - ரை.] [ஜீவாத்மாவும் பரமாத்மாவும்] **ऋतम्** - கர்மபலத்தை, **पिबन्तौ** - அநுபவித்துக்கொண்டு, **सुकृतस्य** - ஸுக்ருதத்தால் ஸாதிக்கப்படும், **लोके** - [இந்த] லோகத்திலேயே, [**वर्तमानौ** - இருந்துகொண்டு], **गुहाम्** - குஹையில் [ஹ்ருதயமாகிற குஹையில்], **प्रविष्टौ** - ப்ரவேஶித்திருக்கிருர்கள். [அவ்விடத்திலும்] **परार्ध्ये** - மிகவும் உத்க்ருஷ்டமான, **परमे** - பரமமாகிற ஹார்த்தாகாஶத்தில் [இருக்கிருர்கள்]. **छायातपौ** - நிழலும் வெயிலும்போல [ஒருவர் அஜ்ஞராகவும் மற்ருெருவர் ஸர்வஜ்ஞராகவும்] இருக்கிருர்கள். [இப்படி] **पञ्चाग्नयः** - பஞ்சாக்நி வித்யாநுஷ்டாநத்தால் பரிஶுத்தமான அந்தஃகரணத்தை உடையவர்களாகவும், **ये च त्रिणाचिकेताः** - [கீழே விவரித்திருக்கிற ப்ரகாரம்] மூன்று ஆவ்ருத்தி நாசிகேத சயநம் செய்து அதனுல் பரிஶுத்த மநஸ்கர்

னும் இருக்கும், **ब्रह्मविदः** - ப்ரஹ்மவித்துக்கள், **वदन्ति** - சொல்லு கிறார்கள்.

ऋतं पिबन्तौ - கர்ம பலத்தை அநுபவிக்கிறவன் ஜீவாத்மாவே; பரமாத்மாவுக்கு அவ்வநுபவம் அஸங்கதம். ஆனாலும், இருவரையும் கர்ம பலத்தை அநுபவிப்பவர்களாகப் பேசக்கூடும். எவர்களுடன் ஸம்பந்தம் நமக்கு ஏற்படுகிறதோ அவர்களுடைய வ்யவஹாரங்கள் நமக்கும் இருப்பன போலப் பேசுவது உலக வழக்கம். கையில் குடையைப் பிடித்துக்கொண்டு அநேக ஜநங்கள் போகையில், அந்தக் கூட்டத்திற் சிலர்க்குக் குடை இல்லாமற் போனாலும், எல்லாரையும் சேர்த்து ['**छत्रिणो गच्छन्ति**'] குடை பிடித்துக்கொண்டு ஒரு கூட்டம் போகின்றது என்று லோகத்திற் சொல்வார்கள் அன்றோ? [**पातृसंबन्धात्पिबन्तावित्युच्यते छत्रिन्यायेन**] சத்ரி ந்யாயப்படி கர்மபலத்தை அநுபவிக்கு மவனுடன் அதை அநுபவியாமல் இருப்பவனும் சேர்த்துப்படிக்கப்பட்டிருக்கிறபடியால், இருவரும் கர்மபலத்தை அநுபவிக்கிறவர்கள் என்று பேசப்படுகிறார்கள். சத்ரி ந்யாய மென்று இது சொல்லப்படும்.

'ருதம்' என்னும் பதத்திற்குக் 'கர்ம பலம்' என்று பொருள் கூறப்பட்டிருக்கிறது. 'ருதம்' என்பது ஸத்யத்தைக் குறிக்கும். கர்ம பலம் ஸத்யமாக அவஶ்யம் உண்டாகவேண்டு மாதலால் அதை 'ருதம்' என்று சொல்லக்கூடும். இவ்விடத்தில் அந்தப் பதம் புண்ய கர்மத்தை மாத்ரம் குறிக்கின்றது. ஏனென்றால், 'ஸுக்ருத ஸாத்யமான லோகத்தில்' என்று பிந்தி சொல்லப்பட்டிருக்கிறபடியால். புண்ய கர்மங்களும் பலாபிஸந்தியுடன் செய்யப்படும் பக்ஷத்தில் பாப கர்மங்கள்போலப் பந்தகங்களே.

परार्ध्ये - 'பரார்த்தம்' என்பதற்கு 'எண்ணின் முடிவு' 'கடைசி எண்' என்பது பொருள். **परार्धमर्हतीति परार्ध्यम्** - அதாவது: எல்லாவற்றுக்கும் மேல் இருப்பது, உத்க்ருஷ்டமானது என்பது அர்த்தம்.

छायातपौ - நிழல் அஜ்ஞாநத்தையும் ப்ரகாஶம் ஜ்ஞாநத்தையும் குறிக்கும். பரமாத்மா ஸர்வஜ்ஞனாக இருக்கிறபடியால் அவன் ப்ரகாஶமாவான்; ஜீவாத்மா ஸங்குசித ஜ்ஞாநனாக இருக்கிறபடியால் அவன் சாயையாவான். இவ்விடத்தில் ஜீவனை அஜ்ஞனென்று சொல்வதற்கு மற்றுமொரு அபிப்ராயமுண்டு. அதாவது—பரமாத்மாவுடன் ஒரே குஹையில் இருக்கையிலும் 'அவனுடன்கூட இருக்கிறோம்; அவனை அநுபவிக்கிறோம்' என்னும் ஜ்ஞாநம் அவனுக்கு அப்பொழுது இல்லையாகையால், அந்தக் காரணத்தைக்கொண்டும் அவனை அஜ்ஞனென்று சொல்லலாமன்றோ?

இப்படி ஜீவாத்ம பரமாத்ம பரமாக இந்த மந்த்ரத்திற்குப் பொருள் கூறுவதைச் சிலர் ஆக்ஷேபிப்பார்கள். அந்த ஆக்ஷேபமாவது—'இந்த மந்த்ரம் ஜீவனையும் அவனுடைய புத்தியையும் பற்றிப்

பேசுகிற தென்றே சொல்லவேண்டும். ஏனென்றால்: (1) பரமாத்மவைக் கர்மபல போக்தாவாகப் பேசுவது அஸங்கதம்; (2) எங்கும் இருக்கும் பரமாத்மாவை ஹ்ருதய குஹையில் இருப்பதாகப் பேசுவதும் ஸுக்ருத ஸாத்யலோகத்தில் இருப்பதாகப்பேசுவதும் அஸங்கதம். புத்தியையும் ஜீவனையும் பற்றி இது பேசுகின்றது என்று சொல்லும் பக்ஷத்தில், இந்த ஆக்ஷேப மொன்றும் உதியாது. புத்தியைக் கர்மபல போக்தா வென்று பேசுவது ஔபசாரிகம்.

இந்த ஆக்ஷேபங்களுக்குக் கீழே ஸமாதானம் சொல்லப் பட்டிருக்கின்றது. (1) கர்ம பலத்தை அநுபவிக்கிறார்களென்றும், குஹையில் சேர்ந்திருக்கிறார்களென்றும், ஒருவர் நிழல் போலவும் மற்றொருவர் ப்ரகாசம் போலவும் இருக்கிறார்களென்றும், இம்மாதிரி ஒன்றுசேர்த்து இரண்டு வஸ்துக்கள் பேசப்படும் இடத்தில், இரண்டையும் ஒரு வகுப்பைச் சேர்ந்ததாகப் பரிக்ரஹிப்பது உசிதமாகுமே த்விர்த்து, ஒன்றை ஒரு வகுப்பைச் சேர்ந்ததாகவும் மற்றொன்றை மற்றொரு வகுப்பைச் சேர்ந்ததாகவும் பரிக்ரஹிப்பது உசிதமாக மாட்டாதன்றோ? ப்ரக்ருதத்தில் ஒன்று சைதந்யத்தை உடைய ஆத்மவஸ்துவென்பது இருகக்ஷிக்காரர்களாலும் ஒத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றதாகையால், மற்றொன்றையும் சேதந வஸ்துவாக எடுத்துக்கொள்வதே உசிதமாகும். "**उभौ गृहं प्रविष्टौ**" [இரண்டு பெயர்கள் வீட்டுக்குள் புகுந்தார்கள்] என்று நிர்த்தேசித்தால், அந்த நிர்த்தேசம் 'ஒரு மனிதனும் அவன் கையில் இருக்கும் தண்டமும் உள்புகுந்தன' என்பதை ஸூசிப்பிக்குமோ? இரண்டு புருஷர்கள் புகுந்தார்கள் என்பதையன்றோ சொல்லும்? (2) பரமாத்மாவைக் கர்ம பல போக்தாவாகப் பேசுவது கீழே விவரித்திருக்கிறபடி சத்ரி ந்யாயத்தால் உபபந்நமாவதுடன், மற்றுமொரு ப்ரகாரமாகவும் உபபந்நமாகும். லோகத்தில் ஒரு கார்யத்தின் ஸாக்ஷாத் கர்த்தாவையும், அதற்கு ஸாக்ஷாத் கர்த்தாவாக இராமல் அதைச் செய்விக்கிறவனாக மாத்ரம் இருப்பவனையும், ஆக இருவரையும் அந்தக் கார்யத்தின் கர்த்தாக்களாகவே பேசுகிறார்களன்றோ? ஸாக்ஷாத்தாகத் தேரிழுப்பவனையும் அதை ஸாக்ஷாத்தாக இழுக்காமல் ஸமீபத்தில் நின்று மற்றவர்களை இழுக்கும்படிச் செய்கிறவனையும் இரண்டு பெயரையும் தேரிழுப்பவர்களென்றே பேசுகிறோம். அம்மாதிரி ஸாக்ஷாத் கர்ம பல போக்தாவாக இருக்கும் ஜீவனையும், அந்த ஜீவனை அப்படிக் கர்ம பலத்தை அநுபவிப்பிக்கும் பரமாத்மாவையும், இருவரையும் கர்மபல போக்தாக்கள் என்று வ்யவஹரிக்கலாமன்றோ? ஜீவன் ப்ரயோஜ்ய கர்த்தா, பரமாத்மா ப்ரயோஜக கர்த்தா என்பதே இவர்களுள் வாசி. புத்தி என்னும் வஸ்துவினிடத்தில் இம்மாதிரி கர்த்ருத்வமொன்றும் ஸம்பவிக்கமாட்டாதாகையால், புத்தியைப்பற்றி இந்த மந்த்ரம் பேசுகின்றது என்று சொல்வது ஸர்வதா அஸங்கதமே.

यस्सेतुरीजानानामक्षरं ब्रह्म यत्परम् ।
अभयं तितीर्षतां पारं नाचिकेतꣳ शकेमहि ॥ २ ॥

आत्मानꣳ रथिनं विद्धि शरीरꣳ रथमेव तु ।
बुद्धिन्तु सारथिं विद्धि मनः प्रग्रहमेव च ॥ ३ ॥

इन्द्रियाणि हयान्याहुर्विषयाꣳस्तेषु गोचरान् ।
आत्मेन्द्रियमनोयुक्तं भोक्तेत्याहुर्मनीषिणः ॥ ४ ॥

---

2. இவ்வாறு நமது ஹ்ருதய குஹையில் நம்முடைய உபாஸநத்தின் ஸௌகர்யார்த்தமாகவே அந்தப் பரமாத்மா ஜீவாத்மாவுடன் கூட ப்ரவேஶித்து நிற்கிறபடியால், அவனை நாம் உபாஸிக்க ஶக்தர்களே என்று சொல்லுகிறது இந்த மந்த்ரம்.

[ப - ரை] **यः** - எவன், **ईजानानां सेतुः** - யாகம் செய்பவரெல்லாருக்கும் ஆதாரமாக [அதாவது: கர்ம பல ப்ரதனாக] இருக்கிறானோ, **यत्** - யாதொன்று, **अक्षरं परं ब्रह्म** - நிர்விகாரமான பரப்ரஹ்மமோ, [**यत्** - எது], **तितीर्षताम्** - [ஸம்ஸாரமாகிற ஸமுத்ரத்தைத்] தாண்ட விரும்புமவர்களெல்லாருக்கும், **अभयं पारम्** - நிர்ப்பயமான [அதாவது: த்ருடமான] கரையோ, [**तम्**] **नाचिकेतम्** - அப்படிப்பட்ட நாசிகேதனை [அதாவது: நாசிகேதமான அக்நி சயநத்திற்கு ப்ராப்யமாயிருக்கும் பரமாத்மாவை], [**उपासितुं**] **शकेमहि** - [உபாஸிப்பதற்கு] ஶக்தர்களாகவே இருக்கிறோம். ஆகையால், 'அவன் எவ்விடத்தான்? அவனை நாம் எவ்விதம் உபாஸிக்கக்கூடும்?' என்று பயப்பட வேண்டாம் என்பது கருத்து.

---

3 - 4. இனி அந்த உபாஸநத்திற்கு எது பரிகரமோ அதை உபதேசிக்க ஆரம்பிக்கிறார். அந்த உபதேஶத்தின் ரீதி பின்வருமாறு இருக்கின்றது. உபாஸநம் செய்வதை ஒரு யாத்ரை போலப் பேசி, யாத்ரைக்கு ரதம், ரதத்தை ஒட்டுகிறவன், குதிரை முதலியவை பரிகரங்களாக இருப்பன போல, உபாஸநத்திற்கு உபாஸகனுடைய ஶரீரம், புத்தி, மநஸ், இந்த்ரியங்கள், அந்த இந்த்ரியங்களுக்கு விஷயங்களாக இருக்கும் ரூப ரஸாதிகள், இவையெல்லாம் பரிகரங்களாகின்றனவென்று சொல்லி, எப்படி யாத்ரா பரிகரங்களான குதிரை முதலியவைகளை அடக்கி ஸ்வாதீநமாக வைத்துக்கொண்டால் யாத்ரை நிர்விக்நமாக நிறைவேறுமோ அப்படியே உபாஸந பரிகரங்களான இந்த்ரியம் முதலியவை எவனுக்கு வஶீக்ருதங்களாக இருக்கின்றனவோ அவனுக்கு உபாஸநம் கைகூடுமென்று த்ருஷ்டாந்த புரஸ்ஸரமாக இந்த உபதேஶம் செய்யப்படுகின்றது. எவை எவை, எவை எவைகளுக்கு த்ருஷ்டாந்தங்களாகின்றனவென்பது இந்த மந்த்ரத்தில் விளக்கப்படுகின்றது.

यस्त्वविज्ञानवान् भवत्ययुक्तेन मनसा सदा ।
तस्येन्द्रियाण्यवश्यानि दुष्टाश्वा इव सारथेः ॥ ५ ॥

यस्तु विज्ञानवान् भवति युक्तेन मनसा सदा ।
तस्येन्द्रियाणि वश्यानि सदश्वा इव सारथेः ॥ ६ ॥

[ப - ரை] **आत्मानम्** - [ஶரீரத்திற்கு அதிஷ்டாதாவாகவும் உபாஸநத்தில் ப்ரவ்ருத்தனாகவும் இருக்கும்] ஆத்மாவை, **रथिनम्** - ரதத்திற்குச் சொந்தக்காரனாக [அதாவது : யாத்ரை செய்கிறவனாக], **विद्धि**- அறிந்துகொள். **शरीरम्** - [அந்த உபாஸகனுடைய] சரீரத்தை, **रथमेव च** ரதமென்று [அறி]. **बुद्धिन्तु** - புத்தி என்று வ்யவஹரிக்கப்படும் அத்யவஸாயத்தை, **सारथिं विद्धि** - தேர் ஓட்டும் ஸாரதி என்று [அறி.] **मनः** - மநஸ்ஸை, **प्रग्रहमेव च** - கடிவாளமென்று [அறி]. **इन्द्रियाणि** - இந்த்ரியங்களை, **हयान्** - குதிரைகளென்று, **आहुः** - [வித்வான்கள்] சொல்லுகிறார்கள். **विषयान्** - [இந்த்ரியங்களுக்கு] விஷயங்களாக இருக்குமவைகளை, **तेषु** - [குதிரையாக வர்ணிக்கப்பட்ட] இந்த்ரியங்களுக்கு, **गोचरान्** மார்க்கமாகச் [சொல்லுகிறார்கள்]. **आत्मेन्द्रि यमनोयुक्तम्** - தேஹம் இந்த்ரியம் மநஸ் [புத்தி முதலியவை] இவைகளுடன் கூடிய, [**आत्मानम्** - ஆத்மாவை], **भोक्तेति** - [கர்த்ருத்வம்] போக்த்ருத்வம் இவைகளை உடைத்தானவனாக, **मनीषिणः** - வித்வான்கள், **आहुः** - சொல்லுகிறார்கள்.

आत्मेन्द्रियमनोयुक्तम् - இவ்விடத்தில் 'ஆத்மா' என்னும் பதத்திற்குத் 'தேஹம்' என்பது பொருள். ரதம், ஸாரதி, குதிரை முதலிய பரிகரங்கள் இராமல் கேவல ரதீ மாத்ரம் இருக்கும் பக்ஷத்தில் எப்படி அது கார்யகாரி ஆகமாட்டாதோ, அப்படியே தேஹம் இந்த்ரியம் மநஸ் முதலியவை யற்ற கேவல ஆத்மாவுக்குக் கர்த்ருத்வ போக்த்ருத்வம் முதலியவை ஸம்பவிக்கமாட்டா என்று இவ்விடத்தில் சொல்லப்படுகின்றது.

---

5 - 6. மநோபுத்திகள் ஸ்வாதீநமாகாமலிருப்பதால் ஜநிக்கும் தீமையும், அவை ஸ்வாதீநமாக இருப்பதால் நேரும் நன்மையும், இவற்றில் விளக்கப்படுகின்றன.

[ப - ரை] **यः** - எவன், **अविज्ञानवान् भवति** - நல்ல புத்தியை உடைத்தாயிருக்கவில்லையோ, **अयुक्तेन** - வஶ்யமாயிராத, **मनसा** - மநஸ்ஸுடன், **सदा** - எப்பொழுதும் [இருக்கிறானோ], **तस्य** - அவனுக்கு, **इन्द्रियाणि** - இந்த்ரியங்கள், **सारथेः दुष्टाश्वा इव** - ஸாரதிக்கு அடங்காத குதிரைகள் போல, **अवश्यानि** - ஸ்வாதீநங்களாக மாட்டா. **यस्तु** - எவனோவென்றால், **सदा युक्तेन मनसा** - எப்பொழுதும் அடங்கி இருக்கும் மநஸ்ஸுடன் **विज्ञानवान् भवति** - நல்ல புத்தியுடன் கூடி இருக்கிறானோ, **तस्य** - அவனுக்கு

ஶ்ரீ:

சந்தா செலுத்தினவர்களின் பெயர்

1—7—'43 to 31—7—'43

[மற்றவர்களும் க்ருபை செய்து சீக்ரத்தில் சந்தாவைச் செலுத்த வேண்டுமென்று ப்ரார்த்திக்கிறோம்.]

For 1943.

			Rs.
1.	Sri S. Krishnamachariar, 60, Perumal Koil Street, Saidapet	...	1 8
2.	,, R. Chakravarthy, Pleader, Vridhachalam	...	3 0
3.	,, T. K. Padmanabha Iyengar, Teacher, English High School, Shencottah	...	3 0
4.	,, R. Veeraswami Iyengar, Thillaisthanam	...	3 0
5.	,, Echuni Gopala Iyengar, Pothanur Post, (Via) Pugalure, Velur, Salem	...	3 0
6.	,, Muthu Vijaya Venkatachalapathy Reddiar, Kotterputhur	...	3 0
7.	,, Gaddam Sreesaila Desika Thathachariar, Elanagar Village, Ravathanallur, Kandigai Post, (Via) Uttiramerur	...	3 0
8.	,, N. S. Narayana Iyengar, B/13, Todhunternagar, Saidapet	...	3 0
9.	,, R. Srinivasacharya, Judge, Pudukottah	...	3 0
10.	,, D. Muthuswami Iyengar, Shermadevi, Ramnad District	...	3 0
11.	,, Dewan Bahadur S. Raghava Iyengar, Retired Judge, Srirangam	...	3 0
12.	,, C. R. Krishnamachariar, Advocate, Cuddalore	...	3 0
13.	,, V. Lakshminarasimhachariar, Ahobila Mutt Agent, Mannargudy	...	3 0
14.	,, M. S. Sundararaja Iyengar, Devastana Superintendent, Vanasankari-amman Koil Street, Ramnad	...	3 0
15.	,, S. M. Krishnamachariar, Imperial Council of Agricultural Research, Cannought Circus, Tarachand Buildings, New Delhi	...	3 0
16.	,, M. S. Anantarama Iyengar, Income Tax Officer, Muthupatinam, Karaikudy	...	3 0
17.	,, V. S. Srinivasa Iyengar, Superintendent Messrs. Hoe & Co., North Uttira Street, Srirangam	...	3 0
18.	,, T. Srinivasa Iyengar, Double Street, Sholavandan, Madura District	...	3 0
19.	,, C. R. Sundarachariar, Receiver, 380, Thukkurdvar, Bombay	...	3 0
20.	,, P. S. Govinda Iyengar, No. 124, West Chittra Street, Srirangam	...	3 0
21.	,, V. T. Desikachariar, Sannidhy Street, Viravanallur	...	3 0

[இந்த ஸஞ்சிகையுடன் இருபது ஸஞ்சிகைகள் வெளியாகி யிருக்கின்றன. 1942-வது வர்ஷத்திய சந்தாவைச் செலுத்தாதவர்களுக்கு ஸஞ்சிகை அனுப்பப்பட மாட்டாது.]

ப்ரமுகர்களான பல ஸ்ரீ வைஷ்ணவர்கள் உதவியால் பிரஸ் ஆரம்பித்துளோம்!

க்ரந்தம், தேவநாகரம் ஹிந்தி,
தமிழ், ஆங்கிலம் அச்சு வேலைகளும்,
எவ்வித ரூலிங், பைண்டிங் வேலைகளும்,

குறித்த காலத்தில் விரைவாகவும் நன்றாகவும் செய்து கொடுப்போம்.

ஆற்காடு பிரஸ், 27, புது அக்ரஹாரம், விழுப்புரம் (S.I.R.)

☞ எல்லா ஸ்ரீ வைஷ்ணவர்களின் ஆதரவையும் கோருகிறோம்.

*Regd. No. M: **4437***

ஸ்ரீ:

ஸ்ரீமதே ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ அஹோபில மடத்தில் அச்சிடப் பெற்ற கீழ்க் கண்ட புத்தகங்கள் 'ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா' ஆபீஸில் விற்பனைக்குத் தயாராயிருக்கின்றன.

	சந்தாதாரர்கள் ரூ. அ. பை	மற்றவர்கள் ரூ. அ. பை
1. அதிகரண ஸாராவளி (தேவநாகர லிபி) [சிந்தாமணி, கல்பதரு வ்யாக்யாநத்துடன் காலிகோ பயிண்ட் செய்தது]	5—0—0	6—0—0
2. ஷை (பைண்டில்லாதது) ...	4—0—0	5—0—0
3. உக்திநிஷ்டாபரணம் ந்யாஸநிஷ்டா மீமாம்ஸா ச (க்ரந்த லிபி)	0—6—0	0—8—0
4. உக்திநிஷ்டாபரஞேத்யோதம் (,,)	0—4—0	0—6 —0
5. வீக்ஷாரண்யக்ஷேத்ர மாஹாத்ம்யம் மணிப்ரவாள வ்யாக்யாநம் ... (க்ரந்த லிபி)	0-12—0	1—0—0
6. ஸ்ரீ அஹோபில மாஹாத்ம்யம் (,,)	0—4—0	0—6—0
7. ஷை (தெலுங்கு லிபி)	0—6—0	0—8—0
8. ந்யாஸ நிர்ணயம் (க்ரந்த லிபி) ...	0—3—0	0—4—6
9. ஸ்ரீ வீரராகவஸ்வாமி ஸுப்ரபாதம் (க்ரந்த லிபி)	0—2—6	0—3—0
வேறு இடங்களில் அச்சிடப்பெற்றவை		
1. மீமாம்ஸா பாதுகை ... ... (பரித்ராணத்துடன் க்ரந்த லிபி)	0—8—0	0-10—0
2. ஸமுத்ரயாந தோஷ நிர்ணயம்; விதவா விவாஹ கண்டநம் (நாகர லிபி) ...	0—4—0	0—6—0
3. தத்வத்ரய நிரூபணம் (க்ரந்த லிபி) ...	0—3—0	0—4—0

(தபால் செலவு வேறு)

வேண்டுபவர்கள் கீழுள்ள விலாஸத்திற்கு எழுதவும் :—

மானேஜர், **ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா ஆபீஸ்,**

23—4—'43.] நெ. 5, ராமஸ்வாமி தெரு, தி. நகர், சென்னை.

N.B. ஷை விலைகள் இன்று முதல் 2 மாதத்திற்கு மட்டுமே குறைவாக ஏற்பட்டிருக்கின்றன.

Printed by K. Satakopachariar, at the Liberty Press, 10, Linghi Chetty Street, G. T., Madras.
Edited & Published by S. Vasudevachariar, 5 Ramaswami Street, Tyagarayanagar, Madras.